## முன்னுரை

தமிழ் பேசும் சகோதரர்கள் அரபு மொழியை இலகுவாகக் கற்றுக் கொள்ள வேண்டும் என்ற அவா என்னுள் நீண்ட நாட்களாகவே இருந்தது. அரபுநாடு சென்ற பின்னர் அங்குள்ள தமிழ்ச் சகோதரர்களுக்கு அரபுமொழி கற்றுக் கொடுத்த போது அச்சகோதரர்கள் இம்முறையை நூலாக்கிடக் கூறினார்கள். அப்போதய சூழ்நிலை சாத்தியமில்லாதிருந்தது. அல்ஹம்து லில்லாஹ். ஏர்வாடி அஸ்மா மகளிர்க் கல்லூரியில் பொறுப்பேற்ற போது இப்பணியினை நிறைவுபடுத்தும் சூழ்நிலை சாதகமாக அமைந்தது. அல்லாஹ்வின் பேரருளால் 1973 ஆம் ஆண்டிலிருந்து இது வரை அரபு படித்துக் கொடுத்த அனுபவங்களில் பல நூல்களிலுள்ளவற்றை முடிந்த அளவு முயற்சி செய்து الدروس الميسرة (அத்துரூசுல் முயஸ்ஸரா)-எளிமைப்படுத்தப்பட்ட பாடங்கள்-- என்ற பெயரில் இந்நூலை அமைத்துள்ளேன். இந்நூல் دروس الفعل الميسرة (துரூசில் ஃபிஃலில் முயஸ்ஸரா)-எளிமைப்படுத்தப்பட்ட வினைச்சொல்லின் பாடங்கள்-- என்ற பெயரில் வினைச் சொற்களைத் தனியாகவும் دروس الأسم الميسرة (துரூசில் இஸ்மில் முயஸ்ஸரா)--எளிமைப்படுத்தப்பட்ட பெயர்ச் சொல்லின் பாடங்கள்-- என்ற பெயரில் பெயர்ச் சொற்களைத் தனியாகவும் ஹர்பு --இடைச் சொற்--களை இடதிற்குத் தகுந்தாற் போலும் கொண்டு வந்து இரு பகுதிகளாக ஆக்கியுள்ளேன். இதனைப் படிப் பவர்கள் இதன் மூலம் பயன் பெற வும் பிறருக்கு பயன் ஏற்டுத்தவும் வேண்டுமென அல்லாஹ்விடம் இருகரம் ஏந்தி பிரார்த்தித்துக் கொள்கிறேன். இதைப் பார்வை யிடும் சகோதரர்கள் குறைகள் கண்டு அறிவித்தால் நன்றியுடன் அடுத்த பதிப்பில் திருத்தம் செய்து கொள்வேன். இன்ஷாஅல்லாஹ்.

ஆக்கியோன்

K. S. ரஹ்மத்துல்லாஹ்

# الصرف

அகராதியில் صرف என்பதற்கு மாற்றுதல் என்று பொருளாகும். இக்கலை அறிஞர்கள் صرف என்பது ஒரு மூலச் சொல்லை நாம் விரும்பும் அர்த்தங்களுக்காக பல்வேறு அமைப்புகளாக மாற்றுவது எனக் கூறுகின்றனர். உதாரணமாக செய்தான் என்பதற்கு فَعَلَ, செய்தாள் என்பதற்கு فَعَلَتْ, செய்வான் என்பதற்கு يَفْعَلُ, செய் என்பதற்கு اِفْعَلْ என்று மாற்றுவது போலாகும். இக் கலைக்கு فِعْل கருவாக எடுத்துக் கொள்ளப்படும்.

فِعْل -என்பது சென்ற, வரும், நிகழ் ஆகிய மூன்று காலங்களில் ஒன்றைக் காட்டக்கூடியதாகும். இந்த فِعْل- مَاضٍ ஐ(சென்ற காலம்) مُضَارِعٌ (வரும், நிகழ்காலம்) اَمْرٌ (ஏவல்) نَهْيٌ (விலக்கல்) என 4 பங்குகளாகும். ماض யில் مَعْرُوْفٌ(செய்வினை) مَجْهُوْلٌ (செயப்பாட்டுவினை) என இரு வகைகள் உள்ளன.

## (1) الدرس الأول الفعل الماضي المعروف

இதில் 14 அமைப்புகள் உள்ளன. இப்பதினான்கில் முதல் 3 (مُذَكَّرٌ غَائِبٌ) ஆண்பால் படர்க்கை, 2வது 3 مُؤَنَّثٌ غَائِبٌ (பெண்பால் படர்க்கை),3வது 3 مُذَكَّرٌ حَاضِرٌ (ஆண்பால் முன்னிலை), 4வது 3مُؤَنَّثٌ حَاضِرٌ (பெண்பால் முன்னிலை), 5 வது 2 مُتَكَلِّمٌ (தன்னிலை).

இந்த 14 அமைப்புகளுக்கும் ماض مثبت (சென்ற கால உடன்பாடு) என்று கூறப்படும். அவை:

| | | |
|---|---|---|
| பல ஆண்கள் செய்தார்கள் فَعَلُوا | இரு ஆண்கள் செய்தார்கள் فَعَلَا | அவன் செய்தான் فَعَلَ |
| பல பெண்கள் செய்தார்கள் فَعَلْنَ | இரு பெண்கள் செய்தார்கள் فَعَلَتَا | அவள் செய் தாள் فَعَلَتْ |
| நீங்கள் பலர் செய் தீர்கள் فَعَلْتُمْ | நீங்கள் இருவர் செய்தீர்கள் فَعَلْتُمَا | நீ செய்தாய் فَعَلْتَ |
| நீங்கள் பலர் செய்தீர்கள் فَعَلْتُنَّ | நீங்கள் இருவர் செய்தீர்கள் فَعَلْتُمَا | நீ செய்தாய் فَعَلْتِ |
| நாங்கள் செய்தோம் فَعَلْنَا | ------------------------------------ | நான் செய்தேன் فَعَلْتُ |

எல்லா فِعْل களுக்கும் فَعَلَ வையே முன்மாதிரியாகக் கொள்ளப்படும். அதாவது فَعَلَ வின் முதல் எழுத்துக்கு ف கலிமா என்றும், 2 வது எழுத்துக்கு ع கலிமா என்றும், 3 வது எழுத்துக்கு ل கலிமா என்றும் கூறப்படும். உதாரணமாக ضَرَبَ வின் முதல் எழுத்துக்கு ف கலிமா என்றும், 2 வது எழுத்துக்கு ع கலிமா என்றும், 3 வது எழுத்துக்கு ل கலிமா என்றும் கூறப்படும்.

1. صرف என்றால் என்ன?
2. فِعْل என்றால் என்ன? அவை யாவை? ماض எத்தனை பங்கு? உதாரணத்துடன் எழுது!

## الصيغة

### உள்ளடக்கம்

فعل فِعْلُ مَاض مَعْرُوفٌ مُثْبَتٌ مُذَكَّرٌ غَائِبٌ وَحْدَانٌ ضمير هو فاعل
فعلا فِعْلُ مَاض مَعْرُوفٌ مُثْبَتٌ مُذَكَّرٌ غَائِبٌ تثنية ضمير هما فاعل
فعلوا فِعْلُ مَاض مَعْرُوفٌ مُثْبَتٌ مُذَكَّرٌ غَائِبٌ جمع ضمير هم فاعل
فعلت فِعْلُ مَاض مَعْرُوفٌ مُثْبَتٌ مُؤَنَّثٌ غَائِبٌ وحدان ضمير هي فاعل
فعلتا فِعْلُ مَاض مَعْرُوفٌ مُثْبَتٌ مُؤَنَّثٌ غَائِبٌ تثنية ضمير هما فاعل
فعلن فِعْلُ مَاض مَعْرُوفٌ مُثْبَتٌ مُؤَنَّثٌ غَائِبٌ جمع ضمير هن فاعل
فعلت فِعْلُ مَاض مَعْرُوفٌ مُثْبَتٌ مُذَكَّرٌ حَاضِرٌ وَحْدَانٌ ضمير انت فاعل
فعلتما فِعْلُ مَاض مَعْرُوفٌ مُثْبَتٌ مُذَكَّرٌ حَاضِر تثنية ضمير انتما فاعل
فعلتم فِعْلُ مَاض مَعْرُوفٌ مُثْبَتٌ مُذَكَّرٌ حَاضِر جَمْعٌ ضمير انتم فاعل
فعلتِ فِعْلُ مَاض مَعْرُوفٌ مُثْبَتٌ مُؤنث حَاضِرٌ وَحْدَانٌ ضمير انتِ فاعل
فعلتما فِعْلُ مَاض مَعْرُوفٌ مُثْبَتٌ مُؤنث حَاضِر تثنية ضمير انتما فاعل
فعلتُنَّ فِعْلُ مَاض مَعْرُوفٌ مُثْبَتٌ مُؤنث حَاضِر مُؤَنَّثٌ جمع ضمير انتن فاعل
فعلتُ فِعْلُ مَاض مَعْرُوفٌ مُثْبَتٌ متكلم مُذَكَّرٌ مُؤَنَّثٌ وَحْدَانٌ ضمير انا فاعل
فعلنَا فِعْلُ مَاض مَعْرُوفٌ مُثْبَتٌ متكلم مُذَكَّرٌ مُؤَنَّثٌ تثنية جمعٌ ضمير نحن فاعل

فعل- இறந்த கால செய்வினை, உடன்பாடு, படர்க்கை, ஒருமை, ஆண்பால்
فعلا--இறந்த கால செய்வினை, உடன்பாடு, படர்க்கை, இருமை, ஆண்பால்
فعلوا- இறந்த கால செய்வினை, உடன்பாடு, படர்க்கை, பன்மை, ஆண்பால்

இந்த உள்ளடக்கத்திற்கு صِيْغَةٌ என்று சொல்லப்படும். இப்போது கூறப்பட்டது போன்றே இந்த மூன்று அமைப்புகள் அல்லாதவற்றிக்கும் அந்தந்த இடங்களுக்குத் தகுந்த வார்த்தைகளை மாற்றிக் கொள்ள வேண்டும்.

---

**பயிற்சி:** கீழ்காண்பவற்றில் 1 வதற்கு مُذَكَّرٌ غَائِب ன் 3 صيغة களையும் 2 வதற்கு مؤنث غائب ன் 3 صيغة களையும் 3 வதற்கு مذكرحاضر ன் 3 صيغة களையும் 4 வதற்கு مؤنث حاضر ன் 3 صيغة களையும் 5 வதற்கு متكلم ன் 2 صيغة களையும் கூறுக!

عَلِمَ عَرَفَ صَرَفَ غَرَفَ غَرَقَ

## (2) الدرس الثاني مَجْهُوْلٌ

معروف ماض ஐ مجهول ஆக்க ف கலிமாவுக்கு ضم ம் ع கலிமாவுக்கு كسر ம் செய்ய வேண்டும். இதற்கும் மேற்சென்ற 14 அமைப்புகள் வரும். அவை:

| | | | | | |
|---|---|---|---|---|---|
| فُعِلَ | செய்யப்பட்டான் | فُعِلاَ | இரு ஆண்கள் செய்யப்பட்டார்கள் | فُعِلُوا | அவர்கள் செய்யப்பட்டார்கள் |
| فُعِلَتْ | செய்யப்பட்டாள் | فُعِلَتَا | இரு பெண்கள் செய்யப்பட்டார்கள் | فُعِلْنَ | அவர்கள் செய்யப்பட்டார்கள் |
| فُعِلْتَ | நீ செய்யப்பட்டாய் | فُعِلْتُمَا | இருவர் செய்யப்பட்டீர்கள் | فُعِلْتُمْ | நீங்கள்செய்யப்பட்டீர்கள் |
| فُعِلْتِ | நீ செய்யப்பட்டாய் | فُعِلْتُمَا | இருவர் செய்யப்பட்டீர்கள் | فُعِلْتُنَّ | நீங்கள் செய்யப்பட்டீர்கள் |
| فُعِلْتُ | நான் செய்யப்பட்டேன் | -------------------------------- | | فُعِلْنَا | நாங்கள் செய்யப்பட்டோம் |

1. معروف ماض ஐ مجهول ஆக்க என்ன செய்ய வேண்டும்? உதாரணத்துடன் எழுது

## (3) الدرس الثالث مَنْفِيٌّ

مثبت ماض ஐ منفي ஆக்க அதன் ஆரம்பத்தில் ما வைச் சேர்க்கவேண்டும். உ.ம்

ما فَعَلَ அவன் செய்யவில்லை -- ما فُعِلَ அவன் செய்யப்படவில்லை

وَمَاقَتَلُوه ومَا صَلَبُوهُ -அவர்கள் அவரைக் கொல்லவுமில்லை, சிலுவையில் அடிக்கவுமில்லை,

وَمَا مَاتُوا وَمَا قُتِلُوا - அவர்கள் மரணமடையவும் இல்லை, கொல்லப்படவுமில்லை.

1 ماض معروف ஐ مجهول ஆக்க என்ன செய்ய வேண்டும்?

2 ماض معروف, مجهول ஆகிய இவ்விரண்டையும் مَنْفِيٌّ ஆக்க என்ன செய்ய வேண்டும்? உதாரணங்களுடன் விளக்குக!

## (4) الدرس الرابع الفعل المُضَارِعُ

ماض ஐ مضارع ஆக்க அதன் ஆரம்பத்தில் ي ت ا ن என்ற நான்கு எழுத்துக்களில் ஒன்றைச் சேர்க்கவேண்டும். இந்நான்கு எழுத்துக்களுக்கு حُرُوْفُ الْمُضَارَعَةِ (முழாரியின் அடையாள எழுத்துக்கள்) என்று கூறப்படும்.

يَفْعَلُ يَفْعَلاَنِ يَفْعَلُوْنَ تَفْعَلُ تَفْعَلاَنِ يَفْعَلْنَ
تَفْعَلُ تَفْعَلاَنِ تَفْعَلُوْنَ تَفْعَلِيْنَ تَفْعَلاَنِ تَفْعَلْنَ
اَفْعَلُ نَفْعَلُ

يَفْعَلُ அவன் செய்வான், செய்கிறான், تَفْعَلُ அவள் செய்வாள், செய்கிறாள், تَفْعَلُ நீ செய்வாய், செய்கிறாய், تَفْعَلِيْنَ நீ செய்வாய், செய்கிறாய், اَفْعَلُ நான் செய்வேன், செய்கிறேன், نَفْعَلُ நாங்கள் செய்வோம், செய்கிறோம்.

குறிப்பு: مضارع வரும் காலம், நிகழ்காலம் ஆகிய இரண்டிற்கும் கூட்டானது. (مُسْتَقْبَلٌ) வரும் காலத்திற்கு மட்டுமே ஆக்குவதற்கு அதன் ஆரம்பத்தில் س அல்லது سَوْفَ என்ற இரண்டில் எதையேனும் சேர்க்கவேண்டும். سَيَقُوْلُ السُّفَهَاءُ மடையர்கள் கூறுவார்கள், سَوفَ تَعْلَمُوْنَ அறிந்து கொள்வீர்கள் என்பதுபோல. حَالٌ (நிகழ் காலம்) க்கு மட்டுமே ஆக்குவதற்கு ل,اَلْآنَ,اَلْحِيْنَ என்ற இவற்றில் எதையேனும் ஒன்றைச் சேர்க்கவேண்டும். لَأَقْرَأُ இப்போது படிக் கிறேன், اَلْآنَ تَمْشِي இப்போது நடக்கிறாய், اَلْحِيْنَ يُسْلِمُ இப்போது கட்டுப்ப டுகிறான்.

مُضَارِع مَعْرُوْف ஐ مَجْهُوْل ஆக்க مضارع ன் அடையாள எழுத்துக்களுக்கு ضم ம் கடைசிக்கு முந்திய எழுத்துக்கு فتح ம் செய்யவேண்டும். இதனையும் செய்வினையைப் போன்றே صرف செய்து கொள்ளவேண்டும்.

يُفْعَلُ يُفْعَلَانِ يُفْعَلُوْنَ تُفْعَلُ تُفْعَلَانِ يُفْعَلْنَ
تُفْعَلُ تُفْعَلَانِ يُفْعَلُوْنَ تُفْعَلِيْنَ تُفْعَلَانِ تُفْعَلْنَ
أُفْعَلُ نُفْعَلُ

يُـفْـعَـلُ செய்யப்படுவான், செய்யப்படுகிறான்.
مُضَارِع ஐ نَـفْـيُ,مَـنْـفِـيٌّ ஆக்க அதன் ஆரம்பத்தில் لا வைச் சேர்க்கவேண்டும். உதாரணம்
لا يَفْعَلُ செய்யமாட்டான், لا يُفْعَلُ செய்யப்படமாட்டான்.

## (5)الدرس الخامس المضارع بلم

مُضَارِع ஆன فـعـل உடன் لم என்ற حـرف இணைந்து வரும், அப்படி வரும் போது சிலமாற்றங்களை ஏற்படுத்தும். அதாவது لَـمْ நுழையும்போது ஒருமைகள், தன்னிலைப் பன்மை ஆகியவற்றின் கடைசிக்கு سـكـون செய்யும், அதற்கு جَـزْمُ என்று சொல்லப்படும், மேலும் இது இருமைகளின் ن, ஆண்பால் பன்மைகளின் ن, முன்னிலைப் பெண்பால் ஒருமையின் ن ஆகியவற்றைப் போக்கிவிடும், அத்துடன் مُضَارِع யின் அர்த்தத்தை مـاض مـنـفـي அர்த்தமாக ஆக்கி விடும். لم ப் போன்றே வார்த்தையில் மட்டும் மாற்றத்தை ஏற்படுத்தும் வேறு நான்கு حـرف கள் உள்ளன. அவை பற்றி نحو ல் விரிவாகக் கூறப்படும். அந்நான்கு لَـمَّـا , اِنْ, لَامُ الْاَمْرِ (அம்ருடைய லாம்),لا لِلـنَّـهْـيِ (நஹ்யுடைய லா) ஆகியவையாகும்.
لَـمْ يَـفْـعَـلْ அவன் செய்யவில்லை, لَـمْ تَـفْـعَـلْ அவள் செய்யவில்லை, لَـمْ تَـفْـعَـلْ நீ செய்யவில்லை, لَـمْ تَـفْـعَلِـي நீ செய்யவில்லை, لَـمْ اَفْـعَـلْ நான் செய்யவில்லை, لَـمْ نَـفْـعَـلْ நாங்கள் செய்யவில்லை.

لَـمْ يَـفْـعَـلْ لَـمْ يَـفْـعَـلَا لَـمْ يَـفْـعَـلُـوا لَـمْ تَـفْـعَـلْ لَـمْ تَـفْـعَـلَا لَـمْ يَـفْـعَـلْـنَ
لَـمْ تَـفْـعَـلْ لَـمْ تَـفْـعَـلَا لَـمْ تَـفْـعَـلُـوا لَـمْ تَـفْـعَـلِـي لَـمْ تَـفْـعَـلَا لَـمْ تَـفْـعَـلْـنَ
لَـمْ اَفْـعَـلْ لَـمْ نَـفْـعَـلْ

مضارع ல் لَـمْ இணையும்போது என்னென்ன மாற்றங்கள் செய்யும், அந்த لَـمْ போன்றே அமல் செய்யக்கூடிய வேறு எத்தனை எழுத்துக்கள் உள்ளன? விளக்கமாக எழுது

## (6)الدرس السادس المضارع بلن

مُضَارِع ஆன فـعـل உடன் لن என்ற حـرف இணைந்து வரும், அப்படி வரும் போது சில மாற்றங்களை ஏற்படுத்தும். அதாவது لن நுழையும்போது ஒருமைகள், தன்னிலைப் பன்மை ஆகியவற்றின் கடைசிக்கு فَتَح செய்யும், அதற்கு نَـصَـب என்று சொல்லப்படும், மேலும் இது لم ஐப் போன்றே

இருமைகளின் ن, ஆண்பால் பன்மைகளின் ن, முன்னிலைப் பெண்பால் ஒருமையின் ن ஆகியவற் றைப் போக்கிவிடும், அத்துடன் مُضَارِع யை مـنـفـي ஆக்கி உறுதிப்படுத்தும். لن ஐப் போன்றே வார்த்தையில் மட்டும் மாற்றத்தை ஏற்படுத்தும் வேறு மூன்று حـرف கள் உள்ளன. அவை பற்றி نحو ல் விரிவாகக் கூறப்படும். அம்மூன்று اَنْ ,كَـي, اِذَنْ ஆகியவையாகும்.

لَنْ يَّفْعَلَ لَنْ يَّفْعَلَا لَنْ يَّفْعَلُوا لَنْ تَفْعَلَ لَنْ تَفْعَلَا لَنْ يَّفْعَلْنَ
لَنْ تَفْعَلَ لَنْ تَفْعَلَا لَنْ تَفْعَلُوا لَنْ تَفْعَلِي لَنْ تَفْعَلَا لَنْ تَفْعَلْنَ
لَنْ اَفْعَلَ لَنْ نفْعَلَ

لَنْ يَّفْعَلَ நிச்சயமாக அவன் செய்யமாட்டான், لَنْ تَفْعَلَ நிச்சயமாக அவள் செய்யமாட்டாள், لَنْ تَفْعَلَ நிச்சயமாக நீ செய்யமாட்டாய், لَنْ تَفْعَلِي நிச்சய மாக நீ செய்யமாட்டாய், لَنْ اَفْعَلَ நிச்சயமாக நான் செய்யமாட்டேன், لَنْ نفْعَلَ நிச்சயமாக நாங்கள் செய்ய மாட்டோம்.

لَنْ இவை اَنْ, كَيْ, اِذَنْ ஐச் சார்ந்தவை. இதுபற்றிய விபரம் அவ்விடங்களில் விரிவாகக் கூறப்படும்.

---

பயிற்சி: கீழ்காணும் முதல் மூன்றை مُضَارِع مَعْرُوْف ஆக, 2 வது மூன்றை مضارع مَجْهُوْل ஆக, 3 வது மூன்றை مـنـفـي ஆக, صرف செய்க!

1 يَعْلَمُ يَصْدُقُ يَرْزُقُ
2 يُلْفَظُ يُكْرَهُ يُظْلَمُ
3 لاَ يَكْفُرُ لا يَنْظُرُ لا يُتْرَكُ

1 مُضَارِع مَعْرُوْف ஐ مَجْهُوْل ஆக்க என்ன செய்ய வேண்டும்?

---

2 مُضَارِع ல் لَنْ, لَمْ நுழையும்போது என்னென்ன செய்யும்? صرف உடன் எழுது

## الدرس السابع الْـاَمْرُ (7)

اَمْرُ (ஏவல்) امر الْغَائِبِ (ஏவல் படர்க்கை), امر الحَاضِرِ (ஏவல் முன்னிலை) என இரு பங்குகளாகும். مضارع ன் ஆரம்பத்தில் كسر உள்ள ل ஐச் சேர்த்து கடைசிக்கு சுகூன் செய்தால் அது امر الغائب ஆகிவிடும். அவை:

لِيَفْعَلْ لِيَفْعَلاَ لِيَفْعَلُوا لِتَفْعَلْ لِتَفْعَلاَ لِيَفْعَلْنَ

لِيَفْعَلْ அவன் செய்யட்டும், لِيُفْعَلْ அவன் செய்யப்படவும்.

امر الحَـاضِـر எடுக்க மூன்று முறைகள் உள்ளன. 1. مضارع ன் அடையாள எழுத்தைப் போக்கவேண்டும் அப்படிப் போக்கிய பின்னர் அதற்கு அடுத்த எழுத்துக்கு حَـرَكَـةٌ இருந்தால் கடைசிக்கு சுகூன் செய்யவேண்டும். உதாரண மாக يَـتَـعَـلَّـمُ ,يَـصِـلُ என்பதில் مضارع ன் அடையாள எழுத்தைப் போக்கிவிட் டால் அதற்கடுத்த எழுத்துக்கு حَـرَكَـةٌ இருப்பதால் கடைசிக்கு سكـون செய் தால் மட்டும் போதும்.

صِلْ صِلاَ صِلُـوا صِلِـي صِلَا صِلْـنَ

تَـعَلَّمْ تَـعَلَّمَـا تَـعَلَّمُـوا تَـعَلَّمِـي تَـعَلَّمَـا تَـعَلَّمْـنَ

صِـلْ நீ சேர்த்துக் கொள், تَـعَلَّمْ நீ கற்றுக் கொள்

صِلُوا أرْحَامَكُمْ உங்களின் சொந்த பந்தங்களை சேர்த்து வாழுங்கள், تَعَلَّمُوا الْقُرْآنَ குர்ஆனைப் படியுங்கள்.

2 مضارع ன் அடையாள எழுத்தைப் போக்கிய பின்னர் அதற்கு அடுத்த எழுத்துக்கு سكـون இருந்தால் அதைப் படிக்க முடியாது, ஆதலால் அதற்டுத்த எழுத் தைப் பார்க்கவேண்டும், அதற்கு فـتـح அல்லது كسـر இருந்தால் ஆரம்பத்தில் كسـر உள்ள هَـمْـزَة வைச் சேர்த்து கடைசிக்கு سكـون செய்யவேண்டும். உதாரணமாக يَـنْـفَـعُ يَـحْـذِفُ என்பதில் مضارع ன் அடையாள எழுத்தைப் போக்கிய பின்னர் அதற்கடுத்த எழுத்துக்கு سكـون இருப்பதால் ஆரம்பத்தில் كسـر உள்ள هَـمْـزَة வைச் சேர்த்து கடைசிக்கு சுகூன் செய்ய வேண்டும்.

اِنْـفَعْ اِنْـفَعَـا اِنْـفَعُـوا اِنْـفَعِـي اِنْـفَعَـا اِنْـفَعْـنَ

إحْـذِفْ إحْـذِفَـا إحْـذِفُـوا إحْـذِفِـي إحْـذِفَـا إحْـذِفْـنَ

اِنْـفَعْ நீ பிரயோசனம் செய், اَحْـذِفْ நீ போக்கி விடு.

3 مضارع ன் அடையாள எழுத்தைப் போக்கிய பின்னர் அதற்கு அடுத்த எழுத்துக்கு سكـون இருந்தால் அதைப் படிக்க முடியாது. ஆதலால் அதற்டுத்த எழுத்தைப் பார்க்கவேண்டும், அதற்கு ضـم இருந்தால் ஆரம்பத்தில் ضـم உள்ள هَـمْـزَة வைச் சேர்த்து கடைசிக்கு سكـون செய்யவேண்டும். உதாரணமாக يَـنْـبُـتُ ,يَـرْزُقُ என்பதில் مضارع ன் அடையாள எழுத்தைப் போக்கிய பின்னர் அதற்க டுத்த எழுத்துக்கு سكـون இருப்பதால் ஆரம்பத்தில் ضـم உள்ள هَـمْـزَة வைச் சேர்த்து கடைசிக்கு சுகூன் செய்ய வேண்டும்.

أُرْزُقْ أُرْزُقَا أُرْزُقُوا أُرْزُقِي أُرْزُقَا أُرْزُقْنَ
أُثْبُتْ أُثْبُتَا أُثْبُتُوا أُثْبُتِي أُثْبُتَا أُثْبُتْنَ

أُرْزُقْ வாழ்வாதாரம் வழங்கு, أُثْبُتْ உறுதியாக இரு

## الدرس الثامن النَّهْيُ (8)

نَهي حَاضِرٌ (படர்க்கை விலக்கல்), نَهيٌ غَائِبٌ -نَهْي (முன்னிலை விலக்கல்) என இரு வகைப்படும். مضارع ன் ஆரம்பத்தில் لا வைச் சேர்த்து கடைசிக்கு جزم செய்தால் அது نَهيٌ ஆகிவிடும்.

لا يَفْعَلْ لا يَفْعَلَا لا يَفْعَلُوا لا تَفْعَلْ لا تَفْعَلَا لا يَفْعَلْن
لا تَفْعَلْ لا تَفْعَلَا لا تَفْعَلُوا لا تَفْعَلِي لا تَفْعَلَا لا تَفْعَلْنَ

لا يَفْعَلْ அவன் செய்ய வேண்டாம்.

## الدرس التاسع نون التَّأْكِيْدِ (9)

تأكيد(உறுதிப்படுத்தும் நூன்) ثَقِيْلَةٌ (கனமானது) خَفِيْفَةٌ (இலேசானது) என இரு வகைப்படும். இவ்விரு نون களும் مضارع, نهي, امر ஆகியவற்றின் மீது நுழையும் அப்படி நுழையும்போது அவற்றின் ஆரம்பத்தில் فتح செய்யப்பட்ட ل சேர்க்கப்படும்.

مضارع உடன் ثقيلة வுக்கு உ.ம்

| | | |
|---|---|---|
| لَيَفْعَلَنَّ | لَيَفْعَلَانِّ | لَيَفْعَلُنَّ |
| لَتَفْعَلَنَّ | لَتَفْعَلَانِّ | لَيَفْعَلْنَانِّ |
| لَتَفْعَلَنَّ | لَتَفْعَلَانِّ | لَتَفْعَلُنَّ |
| لَتَفْعَلِنَّ | لَتَفْعَلَانِّ | لَتَفْعَلْنَانِّ |
| لَأَفْعَلَنَّ | ------- | لَنَفْعَلَنَّ |

لَيَفْعَلَنَّ நிச்சயமாக அவன் செய்வான்

لَتَكُوْنَنَّ مِنَ الْخَاسِرِيْنَ நிச்சயமாக நீர் நஷ்டமடைந்தவர்களில் ஆகிவிடுவீர்,

لَاَكِيْدَنَّ اَصْنَامَكُمْ நிச்சயமாக உங்களின் சிலைகளை உடைத்தெறிவேன்.

مضارع مجهول உடன் ثقيلة வுக்கு உ.ம்

لَيُفْعَلَنَّ நிச்சயமாக அவன்செய்யப்படுவான்.

لَتُسْئَلُنَّ يَوْمَئِذٍ عَنِ النَّعِيْمِ அன்றைய தினம் பாக்கியங்கள் பற்றி நிச்சயம் நீங்கள் விசாரிக்கப்படுவீர்கள்.

امر غائب உடன் **ثقيلة** வுக்கு உ. ம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| لِيَفْعَلَنَّ | لِيَفْعَلاَنِّ | لِيَفْعَلُنَّ | لِتَفْعَلَنَّ | لِتَفْعَلاَنِّ | لِيَفْعَلْنانِّ |

لِيَفْعَلَنَّ நிச்சயமாக அவன் செய்யட்டும்.

لِيَعْبُدُوا رَبَّ هذَا الْبَيْتِ நிச்சயமாக அவர்கள் இவ்வீட்டின் இறைவனை வணங்கட்டும்.

امر غائب مجهول உடன் ثقيلة வுக்கு உ.ம்

لِيُفْعَلَنَّ நிச்சயமாக அவன் செய்யப்படட்டும்

امر الحاضر உடன் ثقيلة வுக்கு உ.ம்

| | | | | |
|---|---|---|---|---|
| اِفْعَلَنَّ | اِفْعَلاَنِّ | اِفْعَلُنَّ | اِفْعَلِنَّ | اِفْعَلاَنِّ | اِفْعَلْنَانِّ |

اِفْعَلَنَّ நிச்சயமாக நீ செய்

**نهي غائب، نهي حاضر** உடன் ثقيلة வுக்கு உ.ம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| لايَفْعَلَنَّ | لا يفْعَلاَنِّ | لا يَفْعَلُنَّ | لا تَفْعَلَنَّ | لا تَفْعَلَانِّ | لايَفْعَلْنَانِّ |

لايَفْعَلَنَّ நிச்சயமாக அவன் செய்ய வேண்டாம்

**لا تَفْعَلَنَّ** لا تَفْعَلاَنِّ **لاتَفْعَلُنَّ لا تَفْعَلِنَّ** لا **تَفْعَلاَنِّ** لاتَفْعَلْنانِّ

لا تَفْعَلَنَّ நிச்சயமாக நீ செய்ய வேண்டாம்

مضارع உடன் خَفِيْفَة வுக்கு உ. ம்

لَيَفْعَلَنْ لَيَفْعَلُنْ لَتَفْعَلَنْ لَتَفْعَلَنْ لَتَفْعَلُنْ لَتَفْعَلِنْ لَافْعَلَنْ لَنَفْعَلَنْ

குறிப்பு: இதற்கும் ثقيلة உடைய அர்த்தம்தான், இதுவும் ثقيلة வரக்கூடிய**فعل** களில் வரும் எனவே அதை صرف செய்வதுபோல இதையும் صرف செய்து கொள்ளவேண்டும், இந்த خفيفة- تثنية, جمع المؤنث ஆகிய இரண்டிலும் இரு சுகூனுள்ள எழுத்துக்கள் சேர்வதால் வராது.

இதுவரை فعل களின் பங்குகளான ماض, مضارع, امر, نهي ஆகிய நான்கும் முடிவுற்று விட்டது. இனி فعل களுடைய உட்பிரிவுளைப் பார்ப்போம்.

## (10) الدرس العاشراَلْفعل بِحَسْبِ اللَّفْظِ وَالْمَعْنى

فعل அர்த்தம், வார்த்தையைக் கவனித்து இரண்டு, இரண்டு பங்குகள் உள்ளன. அர்த்தத்தைக் கவனித்துள்ள இரு பங்குகள் لاَزِمٌ (குன்றிய வினை) செய்பவனின் செயல் அவனை விட்டும் கடக்காதது, مُتَعَدٍّ (குன்றா வினை) செய்பவனின் செயல் அவனை விட்டும் கடந்து விடக்கூடியது. உ.ம் جَلَسَ خَالِدٌ - காலித் அமர்ந்தான், نَزَلَ القرآنُ - குர்ஆன் இறங்கியது, ذَهَبَ زَيْدٌ-ஸைத் சென்றான், قَامَ مُحُمَّدٌ- முஹம்மத் நின்றான், ضَحَكَتْ فَاطِمَةٌ-பாத்திமா சிரித்தாள், نَامَتْ آمِنَةٌ-ஆமினா தூங்கினாள்.
شَرِبَ حُسَيْنٌ اَكَلَ حَسَنٌ تُفَّاحًا- ஹஸன் ஆப்பிள் சாப்பிட்டான், قَرَأَتْ فَأطِمَةٌ عَصِيْرَ الْبُرْتُقَالِ -ஹு{ஸைன் ஆரஞ்சு ஜு{ஸ் குடித்தான், دَرْسًا -பாத்திமா பாடம் படித்தாள், حَفِظَتْ عَائِشَةُ قُرْآنًا -ஆயிஷா குர்ஆன் மனனம் செய்தாள்.

முதல் 6 உதாரணங்கள் لاَزِمٌ ஆகும். இந்த ஆறு உதாரணங்களில் செய்பவனின் செயல் அவனை விட்டும் கடக்கவில்லை. இரண்டாவது 6 مُتَعَدٍّ ஆகும். இவ்வாறிலும் செய்பவனின் செயல் அவனை விட்டும் கடந்து செய்படு பொருளின் அளவில் சென்றுவிட்டது

---

குறிப்பு: 1. لازم ன் ஆரம்பத்தில் ا ஐச் சேர்த்தால் அல்லது அதன் ع கலிமாவை இரட்டிப்பாக்கினால் அல்லது இறுதியில் ب வைச் சேர்த்தால் அது متعد ஆகிவிடும். أَشْرَبَ خَالِدٌ بَكْرًا - காலித் பக்ரை குடிக்கவைத்தான்,
نْزَّلَ اللهُ القرآنَ-அல்லாஹ் குர்ஆனை இறக்கினான், ذَهَبَ حَامِدٌ بِزَيْدٍ - ஹாமித் ஸைதை செல்ல வைத்தான்.

---

லாஜிம்‘ متعد என்றால் என்ன? لازم ஐ مُتَعَدٍّ ஆக்க என்ன செய்யவேண்டும்? உதாரணத்துடன் எழுது!

## (11) الدرس الحادي عشر بِحَسْبِ اللَّفْظِ

فعل வார்ததைக் கவனித்து ثُلاَثِيٌّ الْمُجَرَّدُ (மூன்று எழுத்துக்கள் மட்டும் உள்ளது), رُبَاعِيٌّ الْمُجَرَّدٌ (நான்கு எழுத்துக்கள் மட்டும் உள்ளது) என்று இரண்டு பங்குகளாகும், அவ்விரண்டில் ثُلاَثِيٌّ الْمَزِيْدِ فِيْهِ (மூன்றெ

ழுக்களைவிட அதிகமாக்கப்பட்டவை) رُبَـاعِـيّ الْـمَـزِيْدُ فِيْـه (நான்கு எழுத்துக்களைவிட அதிகமாக்கப்பட்டவை) என இரண்டு பங்குகளாகின்றன ஆக நான்கு பங்குகளாகின்றன.

مجرد மேலே சென்றவிட்ட فَـعَـلَ ஆகும். ثلاثي مزيد فيه ல் மூன்று பங்குகள் உள்ளன. அவை வருமாறு:

1 வது ஒரு எழுத்து அதிகமாக்கப்பட்டது. இதற்கு மூன்று அமைப்புகள் உள்ளன. அவை:-

1. أَفْـعَـلَ نَـحْـوُ أَنْـزَلَ
2. فَعَّلَ نَـحْـوُ نَزَّلَ
3. فَاعَلَ نَـحْـوُ قَاتَلَ

2 ஆவது இரு எழுத்துக்கள் அதிகமாக்கப்பட்டது. இதற்கு 5 அமைப்புகள் உள்ளன.

1 تفعَّلَ نحو تَـنَـزَّل 2 تَـفَـاعَـلَ نحو تَـدَارَكَ 3 اِفْـتَـعَـلَ نحو اِجْـتَـمَـعَ

4 اِنْـفَـعَـلَ نحو اِنْـكَـسَـرَ 5 اِفْـعَـلَّ نحو اِحْـمَـرَّ

تَنَزَّلَ- இறங்கினான், تَدَارَكَ - விளங்கினான், اِجْتَمَعَ-சேர்ந்தான், اِنْكَسَرَ - உடைந்தது, إحمرّ-சிவந்தான்.

கீழ்காண்கவற்றில் முதலாவதை ماض ஆகவும் 2ஆவதை امر الحاضر வும் 3ஆவதை نـهي ஆகவும் செய்க!

أَكْرَمَ قَاتَلَ فَرَّقَ تَنَزَّلْ تَكَاثَرْ اِعْتَصِمْ لاَ تَفَرَّقْ لاَ تَجْتَمِعْ

---

3. மூன்று எழுத்துக்கள் அதிகமாக்கப்பட்டது. இதற்கு 7 அமைப்புகள் உள்ளன.

| | | | |
|---|---|---|---|
| اِسْتَخْرَجَ | نحو | اِسْتَفْعَلَ | 1 |
| إحمارّ | نحو | اِفْعَالَّ | 2 |
| اِعْشَوْشَبَ | نحو | اِفْعَوْعَلَ | 3 |
| اِجْلَوَّذَ | نحو | اِفْعَوَّلَ | 4 |
| اِقْعَنْسَسَ | نحو | اِفْعَنْلَلَ | 5 |

| | | | |
|---|---|---|---|
| 6 | اِفْعَنْلى | ذ حو | اِسْلَنْقى |
| 7 | اِفْعَلَّ | ذ حو | اِقْشَعَرَّ |

குறிப்பு: 1. மேற் சென்ற 3 பங்குகளில் 3 ஆவது பங்கின் முதல் அமைப்பு நீங்கலாக உள்ள ஏனைய 6 அமைப்புகளும் பழக்கத்தில் குறைவாகவே வரும். இவ்வாறு குறைவாக வருவ தற்கு شاذ என்றும் அதிகமாக பழக்கத்திலுள்ளவற்றுக்கு مُطَّرِدٌ என்றும் கூறப்படும். 3 ஆவது பங்கின் முதல் அமைப்பும்1ஆவது 2ஆவது பங்கின் எல்லா அமைப்புகளும் مُطَّرِدٌ ஆகும்.

اِسْتَخْرَجَ-வெளியாக வேண்டினான், إحمارّ-அதிக சிகப்பானான் اِعْشَوْشَبَ - புற் பூண்டு முழைத் தது, اِجْلَوَّذَ - குதிரை சவாரி செய்தான், اِقْعَنْسَسَ -தொந்தி நடந்தான், اِسْلَنْقى-நிமிர்ந்து படுத் தான், اِقْشَعَرَّ- உரோமக்கால் முடி சிலிர்த்தது.

2. இந்த மூன்று பங்குகளிலுள்ள 15 அமைப்புகளையும் **ثلاثي** ன் **ماض معروف** லுள்ள 14 அமைப்புகளைப் போன்று **صرف** செய்து கொள்ள வேண்டும். உ. ம்

اَفْعَلَ اَفْعَلاَ اَفْعَلُوا ... افْعَلْتُ اَفْعَلْنَا
تَفَعَّلَ تَفَعَّلاَ تَفَعَّلُوا ... تَفَعَّلْتُ تَفَعَّلْنَا
اِسْتَفْعَلَ اِسْتَفْعَلاَ اِسْتَفْعَلُوا ... اِسْتَفْعَلْتْ اِسْتَفْعَلْتَا اِسْتَفْعَلْنَ ج

3. இவற்றை مجهول ஆக்க مجرد ثلاثي ஐப் போன்றே முதலெழுத்திற்கு ضم ம் கடைசிக்கு முந்திய எழுத்திற்கு كسر ம் செய்ய வேண்டும். அத்துடன் ஒரு சிறிய வித்தியாசம் அதாவது இவற்றில் முதலெழுத்திற்கு ضم செய்வது போல حركة உள்ள எழுத்துக்களின் முதல் எழுத்துக்கும் ضم செய்ய வேண்டும். متعد யில் மட்டும்தான் مجهول வரும். لازم ல் مجهول வராது. உ.ம்

أُفْعِلَ أُفْعِلاَ أُفْعِلُوا ... أُفْعِلْتُ أُفْعِلْنَا
تُفُعِّلَ تُفُعِّلاَ تُفُعِّلُوا ... تُفُعِّلْتُ تُفُعِّلْن
اُسْتُفْعِلَ اُسْتُفْعِلاَ اُسْتُفْعِلُوا .... اُسْتُفْعِلْتُ اُسْتُفْعِلْنَا

4. மேற்சென்றுள்ள அனைத்து فعل களையும் نهي, امر, مضارع ஆக்குவதில் மேற்கூறிய சட்ட மே, ஆயினும் நான்கெழுத்துள்ள ماض ன் مضارع லும் اَفْعَلَ உடைய امر الحاضر லும் சிறிய மாற்றமுள்ளது. அதாவது مضارع ல் مضارع அடையாள எழுத்துக்கு ضم ம் கடைசிக்கு முந்திய எழுத்துக்கு كسر ம் செய்ய வேண்டும். اَفْعَلَ உடைய امر الحاضر ல் அதன் ஆரம்பத்தில فتح உள்ள ا வைக்க

வேண்டும், ஏனெனில் يُفْعِلُ ன் அஸல் يُـاَفْـعِـلُ ஆகும். مضارع அடையாளத் தைப் போக்கிய பின்னர் அடுத்த எழுத்துக்கு فتح இருப்பதால் அதை அப்ப டியே வைத்து கடைசிக்கு செய்திட வேண்டும். உ .ம்

اَفْعَلَ يُفْعِلِ اَفْـعِـلْ نحو اَكْرَمَ يُكْرِمُ اَكْرِمْ
فَعَّلَ يُفْعِّلُ فَـعِّـلْ نحو عَلَّمَ يُعَلِّمُ عَـلِّـمْ
فَاعَلَ يُفَاعِلُ فَـاعِـلْ نحو خَادَعَ يُخَادِعُ خَـادِعْ
فَعْلَلَ يُفَعْلِلُ فَـعْـلِـلْ نحو وَسْوَسَ يُوَسْوِسُ وِسْـوِسْ

4. இம்மூன்று அமைப்புகளில் أفعل என்ற அமைப்பிலுள்ள همزة வைத் தவிர மற்றய அமைப்புகளின் ஆரம்பத்திலுள்ள همزة களுக்கு هَمْزَةُ الْوَصْلِ என்றும் أفعل வின் همزة வுக்கு همزة القطع என்றும் கூறப்படும். همزة الوصل வார்த்தை யின் ஆரம்பத்தில், உச்சரிக்கப்பட்டு இடையில் வரும்போது உச்சரிக்கப்படமாட் டாது. همزة القطع எல்லா நிலையிலும் உச்சரிக்கப்படும். உ.ம்

اَللّٰهُمَّ اغْفِرْ لي -இறைவா! என்னை மன்னிப்பாயாக!, وَاسْتَغْفَرَرَبَّهُ -அவர் தமது இறைவனிடம் மன்னிப்புக் கோரினார், اَللّٰهُمَّ أَجِرْنَا مِنَ النَّارِ - இறைவா! நரக நெருப்பை விட்டும் எங்களைப் பாதுகாப்பாயாக!

குறிப்பு: افتعل، تفاعل، تفعل ஆகிய மூன்றிலும் சில மாற்றங்களுடன் வேறு அமைப்புகள் பிறந்துள்ளன. அவை.

تفعل، تفاعل ஆகிய இரண்டின் ف கலிமாவில் ت ، ث، د، ذ، ز، س، ش ،ص ،ض، ط، ظ ஆகிய 11 எழுத்துக்களில் ஒரு எழுத்து இருந்தால் ت வின் حركة ஐப் போக்கி, அதை ف வைப் போல மாற்றி, அதை ف வில் இணைத்து, ஆரம் பத்தில் كسر உள்ள ا சேர்த்துக் கொள்ளலாம். இவ்வாறு செய்யும்போது تفعل، تفاعل என்ற இவ்விரண்டும் اِفَّعَّلَ ، اِفَّاعَلَ என்று மாறி விடும். உ.ம் 1. تَزَمَّل என்பதில் ف கலிமா ز வாக இருப்பதால் ت வின் حركة ஐப் போக்கி ت வை ف கலிமாவான ز வைப் போல மாற்றி ز வை ز வில் இணைத்து, ஆரம்பத்தில் كسر உள்ள ا ஐ சேர்த்துக் கொள்ள வேண்டும். இப்போது تَزَمَّل என்பது ازَّمَّل என்று ஆகிவிட்டது. இதைச் صرف செய்யும் முறை:

اِزَّمَّلَ يَزَّمِّلُ اِزَّمُّلاً مُزَّمِّلٌ الأمر اِزَّمَّلْ لِيَزَّمَّلْ والنهي لا تزَّمِّلْ لا يزَّمِّلْ

اِزَّمَّلَ போர்வை போர்த்தினான்

2. تثَاقَل என்பதில் ف கலிமாவில் ث இருப்பதால் அதன் حركة ஐப் போக்கி ت வை ف கலிமாவான ث வைப் போல மாற்றி ث வை ث வில் இணைத்து, ஆரம்

பத்தில் كسر உள்ள ا சேர்க்கும்போது تثاقل என்பது اِثَّاقَلَ என்று ஆகி விடும். இதை صرف செய்யும் முறை:

اِثَّاقَلَ يَثَّاقَلُ اِثَّاقُلاً مُثَّاقِلٌ الأمر اِثَّاقَل لِيَثَّاقَلْ والنهي لا تَثَّاقَلْ لا يَثَّاقَلْ

اِثَّاقَلَ கனமானது

افتعل வின் ஐன் கலிமாவில் மேலே நாம் குறிப்பிட்டுள்ள 11 எழுத்துக்களில் ஒன்று இருந்தால் ت வின் حركة ஐ ف வுக்குத் திருப்பி, ت வை ع ஐப் போல மாற்றி ع ஐ ع ல் இணைப்பதும் ا ஐப் போக்குவதும் கூடும். இப்படிச் செய்யும் போது افتعل என்பது فَعَّلَ என்று மாறி விடுகிறது. உ.ம் اِخْتَصَمَ என்பதன் ف கலிமா ص ஆக இருப்பதால் ت வின் حركة ஐ ف வுக்குத் திருப்பி, ت வை ع ஐப் போல மாற்றி ع ஐ ع ல் இணைத்து ا ஐப் போக்கி விட்டால் خَصَّمَ(வழக் காடினான்) என்று ஆகிவிடும்.

افتعل வின் ف கலிமாவில் ظ، ط، ض, ص ஆகிய நான்கு எழுத்துக்களில் ஒன்று இருந்தால் ت வை ط ஆக மாற்ற வேண்டும். உ.ம் (இணக்கமானான்) اِصْطَلَحَ வின் அஸல் اِصْتَلَحَ என்றிருக்கும் ف கலிமாவில் ص இருப்பதால் அதை ط ஆக மாற்றி, اِصْطَلَحَ என்று கூற வேண்டும். இவ்வாறே اِطَّرَدَ (விரட்டினான்) வின் அஸல் اِطْتَرَدَ வாகும் ف கலிமாவில் ط இருப்பதால் ت வை ط ஆக மாற்றி ط வை ط ல் இணைத்து விடவேண்டும். اِظَّلَمَ என்பதன் அஸல் اِظْتَلَمَ வாகும் ف கலிமாவில் ظ இருப்பதால் ت வை ط ஆக மாற்றி ط வும் ظ ம் உச்சரிப்பில் சிறிது ஒப்பு இருப் பதால் ط வை ظ ஆக மாற்றி ظ ஐ ظ ல் இணைத்து اِظَّلَمَ (அநியாயம் செய் தான்) என்று கூறலாம்.

رباعي مزيد فيه, رباعي **مجرد** ஆகிய இரண்டில் ஒவ்வொன்றுக்கும் ஒரே ஒரு அமைப்பு மட்டுமே உள்ளது. அது **تَفَعْلَلَ, فَعْلَلَ** ஆகும். உ.ம் **دَحْرَجَ**- உருட்டினான், تَدَحْرَجَ -உருண்டான். இதற்குரிய வார்த்தைகள் எண்ணிவிடுமள விற்கே உள்ளன. உதாரணத்திற்கு بعثر-புரட் டினான், تَبَعْثَرَ புரண்டான், عرقب- தந்திரம் செய்வித்தான், تعرقب-தந்திரம் செய்தான், دَمْدَمَ- கோபமூட்டி னான், **تدمدم** -கோபம் கொண்டான், سلسل- சங்கிலியால் பிணைத்தான், تسلسل சங்கிலித் தொடரானது, بسمل - تبسمل- பிஸ்மில்லாஹ் சொன்னான், تحوقل حوقل -லாஹவ்ல வலா குவ்வத்த இல்லாபில்லாஹ் என்று கூறினான், زلزل நடுங்க வைத்தான், تزلزل நடுங்கினான், زَحْزَحَ தூரமாக்கினான், تَزَحْزَحَ தூரமானான் என்பன போல.

---

1. الثلاثي المزيد فيه என்றால் என்ன? அதன் பங்குகளை முழுமையாக எழுது!
2. همزة الوصل, همزة القطع என்று எவற்றுக்கு கூறப்படும்? அவ்விரண்டிற்கி டையிலுள்ள வித்தியாசமென்ன? உதாரணங்களுடன் விளக்கு!
3. சிறு மாற்றங்களுடன் உருவாகி இருக்கின்றன அமைப்புகளில் இரு அமைப்பு களை உதாரணங்களுடன் விவரித்து எழுதுக!

பயிற்சி: اِسْلَنْقَى வை ماض ஆகவும், اِعْشَوْشَبَ வை مضارع ஆகவும், اِجْلَوَّذَ வை امر الحاضر ஆகவும், اِسْتَكْرَمَ வை اسم الفاعل,اسم المفعول ஆகவும் صرف செய்க!

இதுவரை فعل களின் பங்குகளான ماض, مضارع, امر,نهي ஆகிய நான்கை யும் அவை சம்பந்தப்பட்டவற்றையும் தெரிந்து கொண்டோம். இனி فعل களுடன் சம்பந்தப்பட்ட சில اسم கள் உள்ளன. அவை:

## الدرس الثاني عاشر(12)

1. مَصْدَر (தொழில் பெயர்) ثلاثي مجرد ல் இதற்கென்று ஒரு குறிப்பிட்ட அமைப்பு கிடையாது. இதற்கு سَمَاعِيٌّ (செவிவழிச் செய்தி) என்று சொல் லப்படும். அதாவது அரபுகள் பயன்படுத்திய முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

ثلاثي مجرد அல்லாதவற்றில் مصدر கென்று குறிப்பிட்ட அமைப்புகள் உள் ளன. அவற்றிற்கு قِيَاسِيٌّ (ஒப்பு நோக்கல்) என்று சொல்லப்படும்.

ثلاثي مجرد، ثلاثي مزيد குரிய அமைப்புகளை கீழ்காணும் அட்டவணை மூலம் தெளிவாகப் புரிந்து கொள்ளலாம். அவற்றை கீழ்காணும் அட்டவணையில் காணலாம்.

### اوزان الافعال والمصدر مع الامثلة

| ماض | مضارع | مصدر | مـــثـــال | | |
|---|---|---|---|---|---|
| فعل | يفعَل | فعْلا | فتح | يفتَح | فتْحا |
| فعِل | يفعَل | فِعْلاً | علِم | يعلَم | عِلمًا |
| فعُل | يفعُل | فَعَالَةً | كرُم | يكرُم | كرامة |
| اَفْعَلَ | يُفْعِل | افعالا | اَكْرَمَ | يُكْرِمُ | اكراما |
| فَعَّلَ | يُفَعِّل | تفعيلا | عَلَّمَ | يُعَلِّمُ | تعليما |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| فَاعَلَ | يُفَاعِلُ | مُفَاعَلَةً، فِعَألا | خادع | يخادع | مخادعة، خداعا |
| فَعْلَلَ | يُفَعْلِلُ | فَعْلَلَةً، فِعْلاَلاً | زلزل | يزلزل | زلزلة، زلزالا |
| تَفَعَّلَ | يَتَفَعَّلَ | تَفَعُّلاً | تكبر | يتكبر | تكبرا |
| تَفَاعَلَ | يَتَفَاعَلَ | تَفَاعُلاً | تعامل | يتعامل | تعاملا |
| تَفَعْلَلَ | يَتَفَعْلَلُ | تَفَعْلُلاً | تزلزل | يتزلزل | تزلزلا |
| اِفْتَعَلَ | يَفْتَعِلُ | اِفْتِعَالاً | احترم | يحترم | احتراما |
| اِنْفَعَلَ | يَنْفَعِلُ | اِنْفِعَالاً | انقطع | ينقطع | انقطاعا |
| اِفْعَلَّ | يَفْعَلُّ | اِفْعِلاَلاً | احمرّ | يحمرّ | احمرارا |
| اِسْتَفْعَلَ | يَسْتَفْعِلُ | اِسْتِفْعَالاً | استكمل | يستكمل | استكمالا |
| اِفْعَالَّ | يَفْعَالُّ | اِفْعِيْلاَلاً | احمارّ | يحمارّ | احميرارا |
| اِفْعَوَّلَ | يَفْعَوِّلُ | اِفْعِوَّالاً | اخلوّذ | يجلوذ | اجلوذا |
| اِفْعَنْلَلَ | يَفْعَنْلِلُ | اِفْعِنْلاَلاً | اقعنسس | يقعنسس | اقعنساسا |
| اِفْعَنْلَى | يَفْعَنْلِي | اِفْعِنْلاَءً | اسلنقى | يسلنقي | اسلنقاء |
| اِفْعَلَّلَ | يَفْعَلَّلُّ | اِفْعِلَّالٌ | اِقْشَعَرَّ | يَقْشَعَرُّ | اِقْشِعْرَارًا |

குறிப்பு: அட்டவணையில் மூன்றெழுத்துக்கள் மட்டுமுள்ளவற்றில் ماض க்கு وزن என்றும் مضارع க்கு باب என்றும் மூன்றெழுத்தல்லாதவற்றில் ماض க்கு وزن என்றும் مصدر க்கு باب என்றும் சொல்லப்படும். மேலே மூன்றெழுத்துக்களில் நாம் கூறியிருப்பதுபோலவே அவை அல்லாதவற்றிலும் கூறிக் கொள்ளவேண்டும். அதாவது أنْزَل-اِنْزَالٌ க்கு أَفْعَلَ , إِفْعَال-وَزَن , باب என்றும், تَعَلَّمَ-تَعَلُّمٌ க்கு تَفَعَّلَ, وَزَن – تَفَعُّلُ , باب என்றும் இதுபோன்று எல்லாவற்றுக்கும் கூறிக் கொள்ள வேண்டும்.

2. اسم الفاعل والمفعول ஆகும்.

ثلاثي مجرد ல் اسم الفاعل க்குரிய அமைப்பு فَاعِلٌ என்றும் اسم المفعول க்குரிய அமைப்பு مفعول என்றும் வரும். உ.ம்.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| فَاعِلٌ | فَاعِلاَنِ | فَاعِلُونَ | نحو | عالم | عالمان | عالمون |
| فَاعِلَةٌ | فَاعِلَتَانِ | فَاعِلاَتٌ وفَوَاعِلُ | ___ | عالمة | عالمتان | عالمات وعوالم |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| مَفْعُولٌ | مَفْعُوْلاَنِ | مَفْعُوْلُونَ | نحو | معلوم | معلومان | معلومون |
| مَفْعُوْلَةٌ | مَفْعُولَتَانِ | مَفْعُوْلاَتٌ | ___ | معلومة | معلومتان | معلومات |

فاعل செய்தவன், செய்பவன், செய்கிறவன்

مَفْعُولٌ செய்யப்பட்டவன், செய்யப்படுகிறவன், செய்யப்படுவன்

اَنَا جَالِسٌ عَلَى الْكُرْسِيِّ اَمْسِ நான் நேற்று நாற்காலியில் அமர்ந்திருந்தேன், اَنَا جَالِسٌ عَلَى الْكُرْسِيِّ اَلْآنِ இன்று அமர்ந்திருக்கிறேன், اَنَا جَالِسٌ عَلَى الْكُرْسِيِّ غَدًا நாளை அமர்ந்திருப்பேன், هذا مَذْبُوْحٌ اَمْسِ இது நேற்று அறுக்கப் பட்டது, هذا مَذْبُوْحٌ الْآنَ இது இன்று அறுக்கப்படுகிறது, ذلكَ مَذْبُوْحٌ غَدًا அது நாளை அறுக்கப்பட உள்ளது.

குறிப்பு: ثلاثي مجرد ல் குறை, நிறம் ஆகியவற்றைக் காட்டக்கூடியவற்றில் اسم الفاعل - اَفْعَلُ என்ற அமைப்பில் வரும். உ.ம்

عَرَجَ يَعْرُجُ عَرَجًا اَعْرَجُ

باض يَبِيْضُ بَيَاضًا اَبْيَضُ

سَادَ يَسُوْدُ سَوَادًا اَسْوَدُ

اَعْرَجُ اَعْرَجَانِ عُرْجٌ عَرْجَاءُ عَرْجَائَانِ عُرْجٌ

اَبْيَضُ اَبْيَضَانِ بِيْضٌ بَيْضَاءُ بَيْضَائَانِ بِيْضٌ

اَسْوَدُ اَسْوَدَانِ سُوْدٌ سَوْدَاءُ سَوْدَاءَانِ سُوْدٌ

اَعْرَجُ = நொண்டி اَبْيَضُ = வெள்ளையன் اَسْوَدُ = கருப்பன்

குறிப்பு: சில اسم الفاعل சமயம் என்ற فَعِيْلٌ அமைப்பிலும் வரும். அப்படி வரும் போது اسم الفاعل லின் அர்த்தம்தான். சில சமயம் اسم المفعول ன் பொருளுக் கும் பயன்படுத்தப்படும். قَتِيْلٌ என்பதற்கு مَقْتُوْلٌ ன் பொருளான கொல்லப் பட்டவன் என்றும் பொருள் கொள்ளப்படும்.

ثلاثي مزيد فيه ல் اسم الفاعل க்குரிய அமைப்பு مضارع ன் அடையாள எழுத் தின் இடத்தில் ضم செய்யப்பட்ட م ஐச் சேர்த்து கடைசிக்கு முந்திய எழுத்துக்கு كسر செய்ய வேண்டும்.

اسم المفعول க்கு مضارع ன் அடையாள எழுத்தின் இடத்தில் ضم செய்யப் பட்டம் ஐ சேர்த்து கடைசிக்கு முந்திய எழுத்திற்கு فتح செய்ய வேண்டும்.

اسم الفاعل க்கு உ.ம்

يُفْعِلُ – مُفْعِلٌ نحو يُكرم- مُكرمٌ

يُفْعِّلُ – مُفَعِّلٌ نحو يُكرِّم- مُكرّمٌ
يُفَاعِلُ – مُفاعِلٌ نحو يُقاتِل- مُقاتِلٌ
يَتَفَعَّلُ – مُتَفَعِّلٌ نحو يتعلّم- متعلّمٌ
يَسْتَفْعِلُ- مُسْتَفْعِلٌ نحو يَسْتَهْزِءُ-مُسْتَهْزِءٌ

مُكْرِمٌ مُكْرِمَانِ مُكْرِمُوْنَ مُكْرِمَةٌ مُكْرِمَتَانِ مُكْرِمَاتٌ
مُسْتَهْزِأٌ مُسْتَهْزِآنِ مُسْتَهْزِؤُوْنَ مُسْتَهْزِأَةٌ مُسْتَهْزِاَتَانِ مُسْتَهْزِآتٌ

اسم المفعول க்கு உ. ம்

| | | |
|---|---|---|
| يُفْعَلُ – مُفْعَلٌ | نحو | يُكرَم- مُكرَمٌ |
| يُفَعَّلُ – مُفَعَّلٌ | نحو | يُكرَّم- مُكرَّمٌ |
| يُفَاعَلُ–مُفاعَلٌ | نحو | يُقاتَل- مُقاتَلٌ |
| يُتَفَعَّلُ–مُتَفَعَّلٌ | نحو | يُتَعَلَّمُ- مُتَعَلَّمٌ |
| يُسْتَفْعَلُ مُسْتَفْعَلٌ | نحو | يُسْتَهْزءُ- مُسْتَهْزءٌ |

مُكْرَمٌ مُكْرَمَانِ مُكْرَمُوْنَ مُكْرَمَةٌ مُكْرَمَتَانِ مُكْرَمَاتٌ
ثلاثي مجرد, ثلاثي مزيد فيه ஆகிய இரண்டின் اسم الفاعل والمفعول ன் அமைப்புகள் எவ்வாறு வரும்? உதாரணங்களுடன் எழுதுக!
இதுவரை மேலே சென்றுள்ளவற்றின் அமைப்புகளை கீழ்வரும் அட்டவணையின் மூலம் தெளிவாகப் புரிந்து கொள்ளலாம்.

| اسم المفعول | مضارع مجهول | ماض مجهول | اسم الفاعل | مصدر | مضارع معروف | ماض معروف |
|---|---|---|---|---|---|---|
| مَفْعُوْلٌ | يُفْعَلُ | فُعِلَ | فَاعِلٌ | فَعْلاً | يَفْعَلُ | فَعَلَ |
| مُفْعَلٌ | يُفْعَلُ | اُفْعِلَ | مُفْعِلٌ | اِفْعَالاً | يُفْعِلُ | اَفْعَلَ |
| مُفَعَّلٌ | يُفَعَّلُ | فُعِّلَ | مُفَعِّلٌ | تَفْعِيْلاً | يُفَعِّلُ | فَعَّلَ |
| مُفَاعَلٌ | يُفَاعَلُ | فُوْعِلَ | مُفَاعِلٌ | مُفَاعَلَةً | يُفَاعِلُ | فَاعَلَ |
| مُفَعْلَلٌ | يُفَعْلَلُ | فُعْلِلَ | مُفَعْلِلٌ | فَعْلَلَةً | يُفَعْلِلُ | فَعْلَلَ |
| مُتَفَعَّلٌ | يُتَفَعَّلُ | تُفُعِّلَ | مُتَفَعِّلٌ | تَفَعُّلاً | يَتَفَعَّلُ | تَفَعَّلَ |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| مُتَفَاعَلٌ | يُتَفَاعَلُ | تُفُوْعِلَ | مُتَفَاعِلٌ | تَفَاعُلاً | يَتَفَاعَلُ | تَفَاعَلَ |
| | | ------- | مُتَفَعْلِلٌ | تَفَعْلُلاً | يَتَفَعْلَلُ | تَفَعْلَلَ |
| | | ------- | مُفْتَعِلٌ | اِفْتِعَالاً | يَفْتَعِلَ | اِفْتَعَلَ |
| | | ------- | مُنْفَعِلٌ | اِنْفِعَالاً | يَنْفَعِلُ | اِنْفَعَلَ |
| | | ------- | مُفْعِلٌّ | اِفْعِلاَلاً | يَفْعَلُّ | اِفْعَلَّ |
| مُسْتَفْعَلٌ | يُسْتَفْعَلُ | اُسْتُفْعِلَ | مُسْتَفْعِلٌ | اِسْتِفْعَالاً | يَسْتَفْعِلَ | اِسْتَفْعَلَ |
| | | ------- | مُفْعَالٌّ | اِفْعِيْلاَلاً | يَفْعَالُّ | اِفْعَالَّ |
| | | ------- | مُفْعَوْعِلٌ | اِفْعِيْعَالاً | يَفْعَوْعِلُ | اِفْعَوْعَلَ |
| | | | مُفْعَنْلِلٌ | اِفْعِنْلَالاً | يَفْعَنْلِلُ | اِفْعَنْلَلَ |
| | | | مُفْعَوِّلٌ | اِفْعِوَّالاً | يَفْعَوِّلُ | اِفْعَوَّلَ |
| ------- | | | مُفْعَنْلٍ | اِفْعِنْلاَءً | يفْعَنْلِي | اِفْعَنْلى |
| ------- | | | مُفْعَعِلٌّ | اِفْعِلَّالٌ | يَفْعَلُّ | اِفْعَلَّ |

ظرف (கால, இடப பெயரின்) அமைப்புمَفْعَلٌ ، مَفْعَلَةٌ என்று வரும். உ.ம் مَكْتَبٌ، مكتية مدرس، مدرسة என்பதைப்போல. சிலசமயம் مَفْعِلٌ அமைப்பிலும் வரும். منزلٌ என்பதைப் போல.

புத்தகக்கடை, நூலகம் , அலுவலகம் = مَكْتَبٌ، مكتية

பள்ளிக்கூடம், கல்லூரி = مدرس، مدرسة

வீடு, விடுதி, தங்குமிடம் = منزلٌ

اسم الآلة (கருவிப் பெயர்) இது مِفْعَلٌ،مِفْعَلَةٌ،مِفْعَالٌ என்ற அமைப்புகளில் வரும்) உ.ம்

مِفْتَاحٌ-திறக்கும் கருவி, திறவு கோல். مِكْنَسَةٌ விளக்குமார், பெருக்கி சுத்தம் செய்யும் எல்லாவற்றுக்கும் இந்த வார்த்தைதான்.

اسم التفضيل (ஒப்பு உயர்வு பெயர் சொல்)இது ஆண்பாலுக்குاَفْعَلُ (அதிகம் செய்பவன்) என்றும் பெண்பாலுக்கு فُعْلٰى (அதிகம் செய்பவள்) என்றும் வரும். இது நிறம், குறை என்ற பொருளைத் தராத ثلاثي مجرد ல் மட்டுமே எடுக்கப்படும். ثلاثي مجرد அல்லாததில் நிறம், குறை என்ற பொருளைத் தரக்கூடியதில் اسم التفضيل எடுப்பதற்கு அதிகம், கடுமை என்ற பொருள் தரக்கூடியاَفْعَلُ வைக் கொண்டு வந்து பின்னர் அந்தفعل ன் مصدر ஐ نصب செய்து கூற வேண்டும். உ.ம் هُوَ اَشَدُّ اِسْتِخْرَاجًا -அதிகமாக வெளியில் செல்பவன், اَقْوٰى

حُمْرَةً -இவன் நல்ல சிவப்பானவன், اَكْثَرُ صَمًّا - இவன் பெரும் செவிடன் என்பவை போல.

ماض யிலிருந்து இதுவரை நடந்துள்ளவற்றை கீழ்காணும் அட்டவணையில் எளிதாகப் புரிந்து கொள்ளலாம்.

| | | | |
|---|---|---|---|
| فعل | يفعل | فعلا | فاعل |
| فعل | يفعل | فعلا | مفعول |
| الأمر | افعل | ليفعل | ليفعل |
| والنهي | لاتفعل | لايفعل | لايفعل |
| والظرف | مَفعَلٌ,مَفعِل ,مَفْعَلَةٌ | والآلة مِفعَلٌ، مِفعَلَةٌ، مِفْعَالٌ | |
| اسم التفضيل | افعلُ | **والمؤنث** | فُعْلى |
| والتثنية | افعلان, فُعَلَيَان | ----------- | فُعْليان |
| والجمع | افْعَلُوْن,اَفَاعِلُ | ----------- | فُعَلُ, فُعَلَيَاتُ |

---

1. ظرف, اسم الآلة, اسم التفضيل ஆகியவைகளின் அமைப்புகளை எழுது!

பயிற்சி: கீழ்காண்பவற்றை ماض யிலிருந்து اسم التفضيل வரை صرف செய்க!

سَمِع- يَسْمَعُ, وصَفَ- يصِفُ, حَسُن- يَحْسُنُ

## (13) الدرس الثالث عشر افعال معتلة

فعل அதன் எழுத்துக்களைக் கவனித்து سَالمٌ ,غَيْرُ سَالم என இரு பங்குகளாகும். سَالم என்பது ف, ع, ل கலிமாக்களில் عِلة (சீக்கு) எழுத்துக்கள், இரட்டிப்பு எழுத்து, أ ஆகியவை இல்லாததாகும். இவைகளில் ஒன்று இருந்தால் அது غَيْرُ سَالم ஆகும்.

فعل விலுள்ள ف, ع, ل கலிமாக்களில் عِلة எழுத்துக்களான و،ا،ي ஆகிய மூன்றெழுத்துக்களில் ஒன்றிருந்தால் அதற்கு معتل ஆன (சீக்கு) فعل என்று சொல்லப்படும்.

معتل - مثال ، اجوف ، ناقص، என மூன்று பங்குகளாகும்.

ف கலிமாவில் عِلة உடைய எழுத்துகளில் ஒரு எழுத்து இருந்தால் அதற்கு مثال (ஒப்பானது) என்று சொல்லப்படும். இதன் ماض ஐ صرف செய்யும்போது அது صحيح ஆன فعل க்கு ஒப்பாவதால் இதற்கு مثال என்று சொல்லப்படுகிறது. உ.ம்

وَعَدَ وعدا وعدوا وعدت وعدتا وعدن ..... وعدت وعدنا

يسر يسرا يسروا يسرت يسرتا يسرن ..... يسرت يسرنا

واوي ஆன امرحاضر ,مضارع معروف، امر غائب ஆகியவற்றை صرف செய்யும் போது ف கலிமா போக்கப்படும். உ.ம்

المضارع: يَـعِد يَـعِدان يَـعِدُوْنَ ..... اعِد نَـعِدُ

امر الغائب: لِيَـعِدْ لِيَـعِدَا لِيَـعِدُوْا لِيَـعِد لتعدا ليعدن

امر الحاضر:عد عدا عدوا عدي عدا عدن

مصدر ல் ف கலிமாவை போக்கியும் போக்காமலும் சொல்லலாம் போக்கும் போது கடைசியில் ஒரு وقف உடைய ه வை சேர்த்துக் கொள்ள வேண்டும். உ.ம்

وعد يعد وعدا عدة

اسم التفضيل، آلة، ظرف، اسم المفعول، اسم الفاعل مصدر அல்லாத مصدر ، مضارع ஆகியவற்றில் ف கலிமா போக் கப்படமாட்டாது. உ.ம்

وَعَدَ يَعِدُ وَعْدًا وعِدَةً واعد وُعِدَ يُوْعَدُ وَعْدًا مَوْعُوْدٌ

الأمرعِدْ لِيَعِدْ لِيُوْعَدْ والنهي لا تَعِدْ لايَعِدْ لا يُوْعَدْ

والظرف مَوْعِدٌ والآلة مِيْعَادٌ اسم التفضيل اَوْعَدُ والمؤنث وُعْدى

ي உள்ள فعل ல் எதுவும் போக்கப்படமாட்டாது . உ.ம்

يَمَنَ يَيْمَنُ يُمْنًا يامن .... اَيْمَنُ يُمْنى

ثلاثي مزيد فيه ஐ صرف செய்யும்போது எதுவும் போக்கப்படமாட்டாது. ஆயினும் و உள்ள فعل ல் و க்கு سكون இருந்து அதற்கு முந்திய எழுத்துக்கு كسر இருந்தால் و ஐ ي ஆக மாற்றவேண்டும். உ.ம் اِوْعَـاد என்பதில் اِيْـعَـاد என்பது போல ي உள்ள فعل ல் ي க்கு سكون இருந்து அதற்கு முந்திய எழுத்திற்கு ضم இருந்தால் ي வை و ஆக மாற்றவேண்டும். உ.ம் يُـيْـسِـرُ என்பதில் يـُوْسِـرُ என்று கூறுவது போல.

و ، ي உள்ள فعل களின் افتعل வில் و வையும் ي வையும் ت வாக மாற்றி ت வை ت வில் இணைக்க வேண்டும். உ.ம்

اَتَّصَلَ يَتَّصِلُ اِتِّصَالًا مُتَّصِلٌ اِتَّصِلْ لِيَتَّصِلْ لا يَتَّصِلْ لاتَتَّصِلْ
اِتَّسَرَ يَتَّسِرُ اِتِّسَارًا مُتَّسِرٌ اِتَّسِرْ لِيَتَّسِرْ لا تَتَّسِرْ لا يَتَّسِرْ

இன்னும் இவ்விரண்டில் இப்படியும் சொல்லலாம்.

ايتصل ياتصل ايتصالا موتصل اِيتصِلْ لِيَاتصِلْ لا تاتصل لاياتصل
ايتسر ياتسر ايتسارا موتسر اِيتسِرْ ليَاتسر لا تاتسر لاياتسر

و க்கும் ي வுக்கும் முந்திய எழுத்தக்கு فتح இருந்தால் இவ்விரண்டையும் ا ஆக வும் كسر இருந்தால் ي ஆகவும் ضم இருந்தால் و ஆகவும் மாற்ற வேண்டும்.

2 - اجوف ஆகும்.

اجوف என்பது ع கலிமாவில் عِلَة ன் எழுத்துகளில் ஒன்று இருப்பதற்கு சொல் லப்படும். இதில் நடுவில் இடைவெளி இருப்பதால் اجوف என்று சொல்லப்புடகி றது. اجوف ன் ماض معروف ல் و ஐயும் ي வையும் ا ஆக மாற்றப்படும்.
قَوُلَ என்பதில் قال என்றும் بَيِعَ என்பதில باع என்றும் சொல்வது போல. உ.ம்

قال قالا قالوا قالت قالتا قُلْنَ قُلْتُ قُلْنَا
باع باعا باعوا باعت باعتا بِعْنَ بِعْتُ بِعْنَا
خاف خافا خافوا خافت خافتا خَفْنَ خَفْتُ خَفْنَا

மேற்சென்ற மூன்று உதாரணங்களிலும் جمع غائب مؤنث லிருந்து متكلم வரை ع கலிமாவின் حركة ஐ ف கலிமாவிற்குத் திருப்பிய பின் இரு சுகூனுள்ள எழுத் துக்கள் சந்திப்பதால் ع கலிமா போக்கப்பட்டுள்ளது. இதனை ماض مجهول ஆக்கும்போது و ،ي ،ا உள்ள எதுவாக இருந்தாலும் ف க்கு كسر செய்து كسر க்கு தோதுவாக ع கலிமாவை ي வாக ஆக்கிக் கொள்ள வேண்டும். உ.ம்

قِيْلَ قِيلاَ قِيْلُوا قِلْتُ قِلْنَا
بِيْعَ بِيْعَا بِيْعُوا بِعْتُ بِعْنَا
خِيْفَ خِيْفَا خِيْفُوا خِفْتُ خِفْنَا

مضارع معروف ல் கீழ் காணுமாறு صرف செய்யப்படும்.

يَقُوْلُ يَقُوْلَانِ يَقُوْلُوْنَ تَقُوْلُ تَقُوْلَانِ يَقُلْنَ تَقُوْلُ تَقُوْلَانِ تَقُوْلُوْنَ تَقُوْلِيْنَ تَقُوْلَانِ تَقُلْنَ اَقُوْلُ نَقُوْلُ

يَبِيْعُ يَبِيْعَانِ يَبِيْعُوْنَ تَبِيْعُ تَبِيْعَانِ يَبِعْنَ تَبِيْعُ تَبِيْعَانِ تَبِيْعُوْنَ تَبِيْعِيْنَ تَبِيْعَانِ تَبِعْنَ اَبِيْعُ نَبِيْعُ

يَخَافُ يَخَافَانِ يَخَافُوْنَ تَخَافُ تَخَافَانِ يَخَفْنَ تَخَافُ تَخَافَانِ تَخَافُوْنَ تَخَافِيْنَ تَخَافَانِ تَخَفْنَ اَخَافُ نَخَافُ

இவற்றில் ع கலிமாவின் حركة ஐ ف கலிமாவிற்கு திருப்ப வேண்டும். உதாரணமாக يقول என்ப தன் அஸல் يَقْوُلُ என்றும் يبيع என்பதன் அஸல் يَبْيِعُ என்றும் يَخَافُ என்பதன் அஸல் يَخْوَفُ என்றும் இருக்கும் இவ்வனைத்திலும் ع கலிமாவின் حركة ஐ ف கலிமாவிற்கு திருப்பப்பட்டுள்ளது.

مضارع مجهول ன் و، ي உள்ளவற்றில் கீழ்காணுமாறு صرف செய்யப்படும்.

يقال يقالان يقالون تقال تقالان يقلن تقال تقالان تقالون تقالين تقالان تقالن اقال نقال

يباع يباعان يباعون تباع تباعان يبعن تباع تباعان تباعون تباعين تباعان تباعن اباع نباع

يخاف يخافان يخافون تخاف تخافان يخفن تخاف تخافان تخافون تخافين تخافان تخافن اخاف نخاف

இவற்றில் இரு جمع مؤنث களைத் தவிர மற்றய எல்லா அமைப்புகளிலும் ع கலிமாவின்حركة ஐ ف கலிமாவிற்கு திருப்பப்பட்டு, فتح க்கு தோதுவான எழுத்தான ا ஐக் கொண்டு வரப்பட்டுள் ளது. உதாரணமாகيقال என்பதன் அஸல் يُقْوَلُ என்றும் يباع என்பதன் அஸல் يُبْيَعُ என்றும் يُخَافُ என்பதன் அஸல் يُخْوَفُ என்றும் இருக்கும். இவ்வனைத்திலும் ع கலிமாவின் حركة ஐ ف கலிமா விற்கு திருப்பப்பட்டு فتح க்கு தோதுவான எழுத்தான ا ஐக் கொண்டு வரப்பட்டுள்ளது. இரு جمع مؤنث களில் ع கலிமாவின் حركة ஐ ف கலிமாவிற்கு திருப்பிய பின்னர் இரு سكون உள்ள எழுத் துக்கள் சந்திப்பதால் ع கலிமா போக்கப்பட்டுள்ளது. உதாரணமாக يُقَلْنَ என்பதன் அஸல் يُقْوَلْنَ என்றும் يُبَعْنَ என்பதன் அஸல் يُبْيَعْنَ என்றும் يُخَفْنَ என்பதன் அஸல் يُخْوَفْنَ என்றும் இருக் கும். இவ்வனைத்திலும் عகலிமாவின் حركة ஐ ف கலிமாவிற்கு திருப்பப்பட்டு பின்னர் عகலிமா ل கலிமா ஆகிய இரண்டிலும் سكون வந்திருப்பதால் ع கலிமா போக்கப்பட்டுள்ளது.

امرحاضر،امر غائب ஐ கீழ்காணுமாறு صرف செய்யப்படும்.

قُلْ قُولا قُولُوا قُوْلِي قُولَا قُلْن

بِعْ بِيْعا بِيْعُوا بِيْعِي بِيْعَا بِعْن

خَفْ خَافَا خَافُوا خافِي خَافَا خَفْنَ

لِيَقُلْ لِيَقُولا لِيَقُولُوا لِتَقُلْ لِتَقُولَا لِيَقُلْن

لِيَبِعْ لِيَبِيْعا لِيَبِيْعُوا لِتَبِع لِتَبِيْعَا لِيَبِعْن

لِيَخَفْ لِيَخَافَا لِيَخَافُوا لِتَخفْ لِتَخَافا لِيَخَفْنَ

இவற்றில் ஒருமைகளிலும், பெண்பால் பன்மைகளிலும் ع கலிமாவின் حركة ஐ ف கலிமா விற்கு திருப்பப்பட்டு பின்னர் ع கலிமாவிலும் ل கலிமாவிலும் سكون இருப்பதால் ع கலிமா போக்கப்பட் டுள்ளது. மற்றவற்றில் இரு சுகூன்கள் சந்திக்காதலால் ع கலிமா கொண்டு வரப்பட்டுள்ளது.

ثلاثي مجرد ன் اسم الفاعل ல் ع கலிமாவை ء வாக மாற்றப்படும். உ.ம்

قائل قائلان قائلون قائلة قائلتان قائلات وقوائل

بائع بائعان بائعون بائعة بائعتان بائعات وبوائع

خائف خائفان خائفون خائفة خائفتان خائفات خوائف

ثلاثي مجرد ன் اسم المفعول லில் கீழ்காண்பது போல صرف செய்ய வேண்டும்.

مقول مقولان مقولون مقولة مقولتان مقولات

مبيع مبيعان مبيعون مبيعة مبيعتان مبيعات

مخوف مخوفان مخوفون مخوفة مخوفتان مخوفات

இந்த அமைப்புகள் அனைத்திலும் ع கலிமாவின் حركة ஐ ف கலிமாவிற்கு திருப்பப்பட்டுள் ளது. உதாரணமாக مَقُوْلٌ என்பதன் அஸல் مَقْوُوْلٌ என்றிருக்கும். இதில் ع கலிமாவின்حركة ஆன ضمة ஐ ف கலிமாவிற்கு திருப்பிய பின்னர் இரு سكون உள்ள எழுத்துக்கள் சந்திப்பதால் ஒரு و போக்கப்பட்டுள்ளது.

مَبِيْعٌ என்பதன் அஸல் مَبْيُوعُ என்றிருக்கும். இதில் ع கலிமாவின் حركة ஆன ضمةஐ ف கலிமாவிற் குத் தோதுவான كسرة ஆக மாற்றி ف கலிமாவிற்குத்

திருப்பப்பட்டு مَبْيْعٌ என்று மாறிவிட்டது مَخُوْفٌ என்பதன் அஸல் مَخْوُوفٌ என்றிருக்கும். இதில் ع கலிமாவின் حركة ஆனضمة ஐ ف கலிமாவிற் குத் திருப்பிய பின் இரு سكون உள்ள எழுத்துக்கள் சந்திப்பதால் ஒரு و போக்கப்பட்டுள்ளது.

ثلاثي مزيد فيه ல் اسم الفاعل ஐ مضارع معروف ஐப் போலவும், اسم المفعول ஐ مضارع مجهول ஐப் போலவும் صرف செய்து கொள்ள வேண்டும். உ.ம்

مُقِيلٌ مُقِيلانِ مُقِيلُونَ مُقِيلَةٌ مُقِيلَتَانِ مُقِيلَاتٌ
مُبِيْعٌ مُبِيْعَانِ مُبِيْعُونَ مُبِيْعَةٌ مُبِيْعَتَانِ مُبِيْعَاتٌ
مُخِيْفٌ مُخِيْفَانِ مُخِيْفُوْنَ مُخِيْفَةٌ مُخِيْتَانِ مُخِيْفَاتٌ
مُقَالٌ مُقَالان مُقَالُون مُقَالَةٌ مُقَالَتَانِ مُقَالاتٌ
مُبَاعٌ مُبَاعَانِ مُبَاعُوْنَ مُبَاعَةٌ مُبَاعَتَانِ مُبَاعَاتٌ
مُخَافٌ مُخَافَانِ مُخَافُونَ مُخَافَةٌ مُخَافَتَانِ مُخَافَاتٌ

اسم الفاعل களில்ع கலிமாவின்حركة ஐف கலிமாவிற்கு திருப்பப்பட்டுள்ளது. அதாவது مُقِيْلٌ என்பதன் مُقْوِلٌ என் றும் مُبِيْعٌ என்பதன் مُبْيِعٌ என்றும் مُخِيْفٌ என்பதன் அஸல் مُخْوِفٌ என்றும் இருக்கும். இவ்வனைத்திலும்ع கலிமா வின் حركة ஐ ف கலிமாவிற்கு திருப்பப்பட்டு كسر க்கு தோதுவான எழுத்தான ي கொண்டு வரப்பட்டுள்ளது. இவ் வாறே اسم المفعول ல்مُقَالٌ என்பதன் அஸல்مُقْوَلُ என்றும், مُبَاعٌ என்பதன் அஸல் مُبْيَعُ என்றும், مُخَافُ என்பதன் அஸல் مُخْوَفُ என்றும் இருக்கும். இவ்வனைத்திலும் ع கலிமாவின் حركة ஐ ف கலிமாவிற்கு திருப்பப்பட்டு فتح க்கு தோது வான எழுத்தான ا ஐக் கொண்டு வரப்பட்டுள்ளது.

ثلاثي مزيد فيه ன் مصدر ல் أَفْعَلَ، اِسْتَفْعَلَ ஆகிய இரண்டு அமைப்புகளைத் தவிர மற்றய எல்லா அமைப்புகளையும் صحيح ஆக்கப்படும்.

أَفْعَلَ، اِسْتَفْعَلَ இவ்விரண்டின் مصدر ல் ع கலிமாவின் حركة ஐ ف கலிமாவிற்கு திருப்பப்பட்டு, وقف உடைய ه வை சேர்த்துக் கொள்ள வேண்டும். உ.ம்

اقام يقيم اقامة
استقام يستقيم استقامة

اقامة என்பதன் அஸல் اِقْوَامًا என்றும் اِسْتِقَامَةَ என்பதன் அஸல் اِسْتِقْوَامًا என்றும் இருக்கும் இவற்றில் ع கலிமாவின் حركة ஐ ف கலிமாவிற்கு கொடுத்து, وقف உடைய ه வை சேர்க்கப் பட்டுள்ளது.

ثلاثي مزيد فيه ன் امر، نهي அதன் مضارع ஆன فعل ஐ செய்வது போன்றே செய்து கொள்ள வேண்டும். உ.ம்

اَقِمْ اَقِيما اَقِيموا اَقِمِي اَقِيما اَقِمْنَ

لِيُقِمْ لِيُقِيما لِيُقِيموا لِتُقِمْ لِتُقِيما لِيُقِمْنَ
لاتُقِمْ لاتُقِيما لاتُقِيموا لاتُقِيمِيْ لاتُقِيما لاتُقِمْنَ
لايُقِمْ لايُقِيما لايُقِيموا لاتُقِمْ لاتُقِيما لايُقِمْنَ
اِسْتَقِمْ اِسْتَقِيما اِسْتَقِيموا اِسْتَقِمِيي اِسْتَقِيما اِسْتَقِمْنَ
لِيَسْتَقِمْ لِيَسْتَقِيما لِيَسْتَقِيموا لِتَسْتَقِمْ لِتَسْتَقِيما لِيَسْتَقِمْنَ
لاتَسْتَقِمْ لاتَسْتَقِيما لاتَسْتَقِيموا لاتَسْتَقِيمِيْ لاتَسْتَقِيما لاتَسْتَقِمْن
لايَسْتَقِمْ لايَسْتَقِيما لايَسْتَقِيموا لاتَسْتَقِمْ لاتَسْتَقِيما لايَسْتَقِمْن

ثلاثي مجرد، مزيد فيه ன் اسم الفاعل، اسم المفعول ல் مضارع யைப் போல செய்து கொள்ள வேண்டும். உ. ம் مُسْتَقْوِمٌ என்பதில் مُسْتَقْيِمٌ என்றும் مُسْتَقْوَمٌ என்பதில் مُسْتَقَامٌ என்றும் கூறுவது போல.

3 ஆவது ناقص ஆகும்.

ناقص என்பது ل கலிமாவில் عِلة ஆன எழுத்து இருப்பதாகும். இதன் ماض யில் و க்கு حركة இருந்து அவ்விரண்டிற்கும் முன்னாலுள்ள எழுத்திற்கு فتح இருந்தால் و، ي வை الف ஆக மாற்றப்படும். உ. ம்

رَمى رَمَيَا رَمَوْا رَمَتْ رَمَتَا رَمَيْنَ رَمَيْتَ رَمَيْتُمَا رَمَيْتُمْ رَمَيْتِ رَمَيْتُمَا رَمَيْتُنَّ رَمَيْتُ رَمَيْنَا
غزا غزوا غزت غزتا غَزون غَزوْتَ غَزوْتُما غَزوْتُمْ غَزوْتِ غَزوْتُماغَزوْتُنَّ غَزوْتُ غَزوْنا
سرُوَ سرُوَا سرُوا سرُوَتْ سرُوَتَا سرُوْنَ سرُوتَ سرُوتما سرُوتم سرُوتِ سرُوتما سَرُوتُنَّ سَرُوتُ سَرُونا

மேற் சென்றவற்றில் جمع مذكر غائب ல் ل கலிமாவை எவ்வித நிபந்னையுமின்றி போக்கப்படும். மற்றவற்றில் ل கலிமாவுக்கு حركة இருந்து அதற்கு முன்னுள்ள எழுத்திற்கு فتح இருந்தால் ل கலிமா போக்கப்படும். இதற்கு மாற்றமானவற்றில் ل கலிமா போக்கப்படமாட்டாது.

ماض معروف லும் ماض مجهول போன்றுதான். ஆயினும் و، ا உள்ள فعل ல் ل கலிமாவை ع கலிமா வின் كسرة க்குத் தோதுவாக و ஐயும் ا ஐயும் ي வாக மாற்றப்படும். உ. ம்

رُمِيَ رُمِيا رُمُوا رُمِيَتْ رُمِيَتا رُمِيْنَ رُمِيتَ رُمِيْتُمَا رُمِيْتُمْ رُمِيْتِ رُمِيْتُمَا رُمِيْتُنَّ رُمِيْتُ رُمِيْنَا

سُرِيَ سُرِيَا سُرُوا سُرِيَتْ سُرِيَتَا سُرِيْنَ سُرِيْتَ سُرِيتما سُرِيتم سُرِيتِ سُرِيتما سُرِيتُنَّ سُرِيْتُ سُرِيْنَا

مضارع معروف ல் مذكر جمع ல் மட்டும் ل கலிமா எவ்வித நிபந்னையுமின்றி போக்கப்படும்.

உ.ம்

يَغْزو يَغْزوَانِ يَغْزوْنَ تَغْزو تَغْزوانِ يَغْزوْنَ تَغْزو تَغْزوَانِ تَغْزوْنَ تَغْزِيْنَ تَغْزوانِ تَغْزوْنَاَزو نَغْزو

இவற்றில் படர்க்கை, முன்னிலை பன்மை ஆண்பாலும் பெண்பாலும் தோற்றத்தில். ஒன்று போல தோன்றுகிறது. ஆனால் ஏற்படுத்திப் பார்க்கும் போது வித்தியாசம் காணமுடியும்.

يَغْزوْنَ என்ற ஆண்பாலின் அஸல் ل கலிமா போக்கப்பட்டு يفعون என்றும் பெண் பாலில் ل கலிமா போக்கப்படாமலேயே அஸலில் يَفْعُلْنَ என்றும் இருக்கிறது. இவ் வாறே تَغْزوْنَ என்ற முன்னிலை ஆண்பாலின் அஸல் ل கலிமா போக்கப்பட்டு تَفْعُوْنَ என்றும் பெண்பாலில் ل கலிமா போக்கப்படாமல் تَفْعُلْنَ என்றுமிருக்கும்.

يَرْمِي يَرْمِيَانِ يَرْمُونَ تَرْمِي تَرْمِيَانِ يَرْمِيْنَ تَرْمِي تَرْمِيَانِ تَرْمُوْنَ تَرْمِيْنَ تَرْمِيَانِ تَرْمِيْنَ اَرْمِي نَرْمِي

இவற்றில் முன்னிலை ஒருமைப் பெண்பாலின் வார்த்தையும் பன்மைப் பெண்பால் வார்த்தையும் தோற்றத்தில் ஒன்றுபோல தோன்றுகிறது. ஆனால் ஏற்படுதிப் பார்க் கும்போது வித்தியாசம் காணலாம். அதாவது ஒருமையில் ل கலிமா போக் கப்பட் டு تَفْعِيْنَ, تَفْعِلْنَ என்றும் உள்ளது.

يَرْضَى يَرْضَيَانِ يَرْضَوْنَ تَرْضَى تَرْضَيَانِ يَرْضَيْنَ تَرْضَى تَرْضَيَانِ تَرْضَوْنَ تَرْضَينَ تَرْضَيَانِ تَرْضَيْن اَرْضى نَرْضى

இவற்றில் படர்க்கை, முன்னிலை ஆண்பால், பெண்பாலின் வார்த்தைகள் தோற்றத்தில் ஒன்று போல தோன்றினாலும் அஸலை ஏற்படுத்திப் பார்க்கும்போது வித்தியாசம் காணலாம். அதாவது படர்க்கை ஆண்பால் பன்மையில் ل கலிமா போக்கப்பட்டு يَفْعوْنَ என்றும் பெண்பால் பன்மையில் எதுவும போக்கப்படாமல் يَفْعَلْنَ என்றும் உள்ளது. அதுபோன்றே முன்னிலை ஆண்பால் பன்மையில் ل கலிமா போக்கப்பட்டு تَفْعَوْنَ என்றும் பெண்பால் பன்மையில் எதுவும் போக்கப் படாமல் تَفْعَلْنَ என்றும் உள்ளது.

اسم الفاعل ல் ஆண்பால் ஒருமை, பன்மையில் ل கலிமா போக்கப்படும். உ.ம்

غَاز غَازيان غازون غازية غازيتان غازيات وغواز

رامٍ راميان رامون رامية راميتان راميات ورواٍم
راض راضيان راضون راضية راضيتان راضيات ورواضٍ

و உள்ள فعل ன் اسم المفعول அல்லாததில் و வை ي ஆக மாற்றி ي வை يவில் இணைத்திட வேண்டும். உ.ம்

مَرْمِيٌ مَرْمِيَّانِ مَرْمِيُّونَ مَرْمِيَّةٌ مَرْمِيَّتان مَرْمِيَّات
مَرْضِيٌّ مَرْضِيَّان مَرْضِيُّون مَرْضِيَّة مَرْضِيَّتان مَرْضِيَّاتٌ
مَغْزوٌّ مَغْزوَّانِ مَغْزوُّون مَغْزوَّةٌ مَغْزوَّتانِ مَغْزوَّاتٌ

இம்மூன்றில் முதல் இரண்டும் و உள்ள فعل ன் اسم المفعول அல்லாததாக இருப்பதால் و வை ي ஆக மாற்றி ي வை ي வில் இணைக்கப்பட்டுள்ளது. இதன் விபரம் பின்னால் கூறப்பட்டுள்ளது. مَغْزوٌّ என்பதன் அஸல் مَغْزُوْوٌ என்றிருக்கும் و வை, و உடன் இணைத்து مَغْزوٌّ என்றாகிவிட்டது. مَرْمِيٌّ என்பதன் அஸல் مَرْمُويٌ என்றும், مَرْضِيٌّ என்பதன் அஸல் مَرْضويٌ என்றுமிருக்கும். இவ்விரண்டிலும் و வை ي ஆக மாற்றி ي வை ي வில் இணைக்கவேண்டும். அதாவது ஒரு வார்த்தையில் و வும் ي வும் சேர்ந்து, و க்கு சுகூன் இருக்குமானால் و வை ي வாக மாற்றி ي வை ي வில் இணைக்கப்படும். ي வுக்குத் தோதுவாக அதற்கு முந்திய எழுத்திற்கு கஸர் செய்து கொள்ளவேண்டும்.

குறிப்பு: சில فعل களில் முதல் எழுத்தும் கடைசி எழுத்தும், அல்லது இரண்டாவது எழுத்தும் மூன்றாவது எழுத்தும் அல்லது மூன்று எழுத்துக்களிலும் عِلة உடைய எழுத்துக்கள் வரும். அவை அனைத்திற்கும் இதுவரை கூறிய சட்டமே.

---

1. معتل என்றால் என்ன? அது எத்தனை பங்கு?
2. جرى, صام, يَسَرَ ஆகியவற்றை ماض, مضارع, امر, نهي ஆக صرف செய்
3. جرى, صام, يسر ஆகியவற்றை ماض லிருந்து اسم التفضيل வரை صرف செய்

## المضاعف

مضاعف என்பது ع ன் கலிமாவும் ل கலிமாவும் அல்லது முதல் எழுத்தும் மூன்றாவது எழுத்தும் அல்லது இரண்டாவதும் நான்காம் எழுத்தும் ஒரே இன எழுத்துக்களுள்ளதாகும். உ.ம்

مَدَّ،أَمَدَّ، زلزل، تزلزل என்பது போல. இந்த مضاعف ல் போக்குதல், மாற்றுதல் போன்றவை வருவ தால் இதை معتل உடன் அறிஞர்கள் சேர்த்துள்ளனர்.

أَمْلَلْتُ என்பதில் ل மை ي வாக மாற்றி أَمْلَيْتُ என்றும் ظَلِلْتُ، مَسِسْتُ، எனப வற்றில் ل கலிமாவைப் போக்கி ظَلْتُ، مَسْتُ، என்றும் அரபுகள் கூறுவது போல.
ஒரே இன எழுத்துக்கள் சேர்ந்து வரும் போது முதல் எழுத்தை இரண்டாவது எழுத்தில் இணைப்பதற்கு اِدْغَـامٌ என்று சொல்லப்படும். இதில் ادغام, وَاجِـبٌ (கட்டாயமானது), مُـمْـتَــنِـعٌ (தடுக்கப்பட்டது) جائز (செய்யலாம், செய்யாமலும் இருக்கலாம்) என மூன்று வகைகள் உள்ளன.

ادغام கட்டாயமானவை:

مَدَّ مَدَّا مَدُّوا مَدَّتْ مَدَّتَا

مُدَّ مُدَّا مُدُّوا مُدَّتْ مُدَّتَا

يَمُدُّ يَمُدَّانِ يَمُدُّوْنَ تَمُدُّ تَمُدَّانِ تَمُدُّ تَمُدَّانِ تَمُدُّوْنَ تَمُدِّيْنَ تَمُدَّانِ اَمُدُّ نَمُدُّ

يُمَدُّ يُمَدَّانِ يُمَدُّوْنَ تُمَدُّ تُمَدَّانِ تُمَدُّ تُمَدَّانِ تُمَدُّوْنَ تُمَدِّيْنَ تُمَدَّانِ اُمَدُّ نُمَدُّ

مَدًّا مَادٌّ مَادَّانِ مَادُّونَ مَادَّةٌ مَادَّتَانِ مَادَّاتٌ وَمَوَادُّ

مُدَّا مُدُّوا مُدِّي مُدَّا

لا يَمُدَّا لا يَمُدُّوا لا تَمُدَّا لا تَمُدَّا لا تَمُدُّوا لا تَمُدِّي لا تَمُدَّا

மேலே குறிப்பிடப்பட்ட ماض، مضارع، مصدر، اسم الفاعل،امر،نهي ஆகியவற்றில் ادغام கட்டாயமாகும்.

مَدَدْنَ مَدَدْتَّ مَدَدْتُّمَا --- مَدَدْتُّ مَدَدْنَا

مُدِدْنَ مُدِدْتَّ مُدِدْتُّمَا --- مُدِدْتُّ مُدِدْنَا

يَمْدُدْنَ تَمْدُدْنَ، يُمْدَدْنَ تُمْدَدْنَ

اُمْدُدْنَ، لا يَمْدُدْنَ لا تَمْدُدْنَ

مَمْدُوْدٌ مَمْدُوْدَانِ مَمْدُوْدُونَ مَمْدُوْدَةٌ مَمْدُوْدَتَانِ مَمْدُوْدَاتٌ

மேலே குறிப்பிடப்பட்ட ماض ، مضارع ,امر ، نهي ،اسم الفاعل , اسم المفعول ஆகியவற்றில் ادغام செய்வது கூடாது.

ادغام ஆகுமானவை:

جزم உடைய عامل உடனுள்ள ஒருமை, படர்க்கை, முன்னிலை امر ، نهي ன் ஒருமை ஆகியவற்றின் ع கலிமாவில் فتح அல்லது كسر இருந்தால் ل கலிமாவுக்கு كسر ம் فتح ம் செய்யலாம். அதற்கு ضم இருந்தால் ل கலிமாவிற்கு மூன்று حركة செய்யலாம். உ.ம் لَمْ يَفِرَّ لَمْ يَعَضَّ இவற்றில் ل கலிமாவுக்கு فتح ம் كسر ம் வைத்துச் சொல்லலாம்.

لم يَمُدِّ என்பதில் ل கலிமாவில் மூன்று حركة ம் வைத்துக் கொள்ளலாம். இது போன்றே نهي، امر ல் செய்து கொள்ளவேண்டும். உ.ம் فِرَّ ,عَضَّ என்றும், لا تَفِرَّ لاتَعَضَّ، لا يَفِرَّ لايَعَضَّ என்றும் கூறுவது போன்று.

இவற்றை صرف செய்யும் முறை

الماضي: مَدَّ مَدَّا مَدُّوا مَدَّتْ مَدَّتَا مَددْنَ مَددْتَ مَددْتُمَا مَددْتُمْ مَددْتِ مَددْتُمَا مَددْتُنَّ مَددْتُ مَددْنَا

المجهول: مُدَّ مُدَّا مُدُّوا مُدَّتْ مُدَّتَا مُدِدْنَ مُدِدْتَ مُدِدْتُمَامُدِدْتُمْ مُدِدْتِ مُدِدْتُمَا مُدِدْتُنَّ مُدِدْتُ مُدِدْنَا

المضارع :يَمُدُّ يَمُدَّانِ يَمُدُّوْنَ تَمُدُّ تَمُدَّانِ يَمْدُدْنَ تَمُدُّ تَمُدَّانِ تَمُدُّوْنَ تَمُدِّيْنَ تَمُدَّانِ تَمْدُدْنَ اَمُدُّ نَمُدُّ

المضارع المجهول:يُمَدُّ يُمَدَّانِ يُمَدُّوْنَ تُمَدُّ تُمَدَّانِ يُمْدَدْنَ تُمَدُّ تُمَدَّانِ تُمَدُّوْنَ تُمَدِّيْنَ تُمَدَّانِ تُمْدَدْنَ اُمَدُّ نُمَدُّ

امر الحاضر: مُدَّ مُدَّا مُدُّوا مُدِّي مُدَّا اُمْدُدْنَ امر الغائب: لِيَمُدَّ لِيَمُدَّا لِيَمُدُّوا لِتَمُدَّ لِتَمُدَّا لِيَمْدُدْنَ

نهي الحاضر:لا تَمُدَّ لا تَمُدَّا تَمُدُّوا لا تَمُدِّي لا تَمُدَّا لا تَمْدُدْنَ نهي الغائب: لا يَمُدَّ لا يَمُدَّا يَمُدُّوا لا تَمُدُّ لا تَمُدَّا لا يَمْدُدْنَ

ماض،مضارع،امر الخ: مَدَّ يَمُدُّ مَدًّا مَادٌّ مُدَّ يُمَدُّ مَدًّا ممْدُوْدٌ مُدَّ لِيَمُدَّ لِيُمَدَّ لاَ تَمُدَّ لاَ يَمُدَّ لاَ تُمُدَّ والظرف مَمَدٌّ والآلة مِمَدٌّ واسم التفضيل اَمَدٌّ والمؤنث مُمْدى

---

1. مضاعف, ادغام என்றால் என்ன? உதாரணங்களுடன் எழுது
2. ادغام எத்தனை பங்கு? அவற்றை முழுமையாக எழுது

## اَلْمَهْمُوْزُ

அஸல் எழுத்துக்களான ل,ع,ف ஆகிய ஒன்றில் ء இருந்தால் அதற்கு مهموز எனக் கூறப்படும். இதை صحيح ஆன فعل ஐப்போன்றே صرف செய்யப்படும். ஆயினும் இதிலும் மாற்றுவது, போக்குவது போன்றவை இடம் பெறுவதால் இதையும் معتل உடன் சேர்க்கப்படுகிறது. உதாரணமாக أَمَلَ يَأْمُلُ என்பதின் امر ல் ء வை و ஆக மாற்றி اُوْمُلُ என்று சொல்வதுபோல. காரணம் ஒரே வார்த்தையில்

இரண்டு ء ஐ ஒன்று சேர்ந்து இரண்டாவது எழுத்துக்கு سكون இருந்தால் இரண்டாவதை முந்திய எழுத்தின் حركة க்கு தோதுவாக மாற்றிக் கொள்ள வேண்டும். அதாவது முந்திய எழுத்துக்கு فتح இருந்தால் இரண்டாவதை ا ஆக வும் முந்திய எழுத்துக்கு كسر இருந்தால் இரண்டாவதை ي ஆகவும் மாற்றிக் கொள்ளவேண்டும். உ.ம் اَأْمَنَ வில் آمَنَ என்றும் إِأْمَان என்பதில் اِيْمَان என்றும் கூறுவதுபோல. முந்திய ء وصل، உடைய ء ஆக இருந்தால் அதை சேர்த்துப் படிக்கும்போது போக்கியும், இரண்டாவது ء வை அப்படியே வைத்தும் கொள்ள வேண்டும். உ.ம் وَاْمُرْ اَهْلَكَ بِالصَّلٰوةِ என்று குர்ஆனில் வந்திருப்பது போல.

اُأْخُذْ، اُأْكُلْ، اُأْمُرْ என்பவற்றில் இலேசுக்காக இரண்டு ء களையும் போக்கி خُذْ، كُلْ ، مُرْ என்று கூறுகிறார்கள். இதுபோன்றே سَأَلَ يَسْأَلُ إِسْأَلْ என்பவற்றில் இலேசுக்காக ء வைப் போக்கி سَالَ يَسَالُ سَلْ என்று கூறுகிறார்கள்.

அரபுகள் رأى வின் مضارع ல் ء வைப் போக்கி يَرى என்று கீழ்காணுமாறு கூறுகிறார்கள்.

يَرى يَرَيَانِ يرَوْنَ تَرى تَرَيَانِ يَرَيْنَ تَرى تَرَيَان تَرَوْنَ تَرَيْنَ تَرَيَان تَرَيْنَ ارى نَرى

இவற்றில் முன்னிலைப் பெண்பால் ஒருமை, பன்மை ஆகிய இரண்டும் ஒரேபோல இருக்கிறது. ஆயினும் இயல்பான அமைப்பை ஏற்படுத்திப் பார்க்கும்போது வித்தியாசம் தெரியும். அதாவது ஒருமை تَفَيْنَ என்றும் பன்மை تَفَلْنَ என்றும் உள் ளது. இதில் امر எடுக்கும்போது அஸல் பிரகாரம் اِرْأَ என்றும் ء க்களைப் போக்கி ر என்றும் ஒரு எழுத்து மட்டுமிருப்பதால் وقف உடைய ه வைச் சேர்த்து رِهْ என்றும் சொல்லிக் கொள்ள வேண்டும்.

இதை صرف செய்யும் முறையாவது

ماض: رأى رَاَيَا رَاَوا رَاَتْ رَاَتَا رَاَيْنَ رَاَيْتَ رَاَيْتُمَا رَاَيْتُمْ رَاَيْتِ رَاَيْتُمَا رَاَيْتُنَّ رَاَيْتُ رَاَيْنَا

مصدر: رُئْيَةٌ ، رَأْيًا ، رُئْيَا

اسم الفاعل: رَاءٍ رَائِيَانِ رَاءُوْنَ رَائِيَةٌ رَائِيَتَانِ رَائِيَاتٌ ورَوَاء

اسم المفعول: مَرْئِيٌّ كَمَرْمِيٌّ

امرالحاضر: ره ريَا رَأوا رَيْ رَيَا رَيْنَ امر الغائب: لِيَرَ لِيَريَا لِيَرَوا لِتَرَ لِتَرَيَا لِيَرَيْنَ

نهي الحاضر: لا تَرَ لا تَريَا لا تَرَوا لا تَرَيْ لا تَرَيَا لا تَرَيْنَ

نهي الغائب: لا يَرَ لا يَريَا لا يَرَوا لا تَرَيْ لا تَرَيَا لا يَرَيْنَ

ماض،مضارع،امر الى آخِرِهِ: رأى يرى رأيا رأء رُأِىَ يُرى رأيا مَرْئِيٌّ ره لير لِيُرَ لا تَرَ لا يَرَ مَرْاى مِرْاى ارى والمؤنث رُئْيى

------------------ ------------------- -------------------- --------------- -----

1. مهموز என்றால் என்ன? அவற்றை உதாரணங்களுடன் விபரமாக எழுது

2. قَرَاَ, سَأَلَ , أكَلَ இம்மூன்றில் 1 ஆவதை ماض ஆகவும், 2 ஆவதை مضارع ஆகவும் 3 வதை ماض ல் இருந்து اسم التفضيل வரையும் صرف செய்க.

அல்லாஹ்வின் பேரருளால் இந்நூல் நிறைவுற்றது. எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே!